மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 11 / நவம்பர் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



# அமெரிக்காவில் புதிய ஆட்சி




## வெளிநாட்டு கொரோனா தடுப்பூசிகள் இந்தியா வருமா?



## தமிழக எம்பிக்களுக்கு இந்தியில் பதிலளிப்பது சட்டவிதிமீறல்

சு. வெங்கடேசன் எம்பி கடிதம்


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly November 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**தமிழரசு** மதுரை
**செபாஸ்டின்** திருச்சி
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்** தஞ்சை
**அ. இரா. முல்லைக்கோ** பெங்களூர்
நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**
அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

ஆட்சியாளர்கள் மக்களுக்கானவர்களாக இருக்கவேண்டும்
- தலையங்கம்.........4

அமெரிக்க குடியரசுத்தலைவருக்கு தமிழகத்துடன் தொடர்பு.........5

நாடகக் கொட்டாய் முதல் சினிமாக் கொட்டாய் வரை (9)
- பூவைதயா.........8

சகாயம் ஐ.ஏ.எஸ்., ராஜினாமா?.........11

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்றபட்ட மண்டைஓடு.........12

ஸ்மார்ட்போன் ஹேக் செய்யப்பட்டுள்ளதை அறிந்துகொள்வது எப்படி?...13

பேரறிஞர் அண்ணாவிடம் சொக்கிப்போன போப்பாண்டவர்
- அ.இரா. முல்லைக்கோ.........14

மதுரையில் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த
குதிரை வீரன் நடுகல் கண்டுபிடிப்பு......... 16

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முதல் பெண் துணை குடியரசு தலைவர்
தமிழ்நாட்டைச் சேர்ந்த கமலா ஹாரிஸ்......... 17

பயணிகள் கவனிக்க (கவிதை)
-பூவைதயா.........19

ஜலதி பவுண்டேசன்
- உமா சங்கர்.........20

தமிழக எம்பிக்களுக்கு இந்தியில் பதிலளிப்பது சட்டவிதிமீறல்
- சு. வெங்கடேசன் எம்பி கடிதம்.........24

வெளிநாட்டிலிருந்து கொரோனா தடுப்பூசிகள் இந்தியா வருமா?
- பொதுநல மருத்துவர் கு. கணேசன்.........26

தொல்தமிழர் சின்னங்கள் கிடைத்த சோழன் மாளிகையில்
தொல்லியல் துறை ஆய்வு செய்ய வேண்டும்.........28

இனப்படுகொலையை ஆதரிக்கும் முரளிதரனை எதிர்ப்பது
இனவெறியா?
- பெ.மணியரசன் கேள்வி.........29

தமிழ்நாட்டு பரூக் அப்துல்லாக்களும் தமிழர்களுக்கான பாடங்களும்
- தமிழ்த்தேசியன்.........34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# ஆட்சியாளர்கள் மக்களுக்கானவர்களாக இருக்கவேண்டும்!

இந்திய ஒன்றியத்தை ஆளுகின்ற கட்சி, தமிழகத்தையும் ஆள வேண்டும் என்ற நோக்குடன், சரியோ தவறோ, மக்களுக்கு நன்மையோ தீமையோ, எதையும் கருத்தில் கொள்ளாமல், தமிழகத்தில் காலூன்ற வேண்டும் என்ற வேகத்துடன் செயல்பாடுகளில் இறங்கியுள்ளது.

வெறுப்பு அரசியலுக்கு பெயர்போன பாரதிய சனதா, அதிலிருந்து துளியும் விலகாமல் மதத்தை மூலதனமாகக் கொண்டு, கட்சியை வளர்க்க கச்சை கட்டி ஆடுகிறது. அண்ணாவும் கலைஞரும் தங்களது பேச்சை மூலதனமாகக் கொண்டு அரியணை ஏறினார்கள். எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் திரைக் கவர்ச்சியை மூலதனமாகக் கொண்டு அரியணை ஏறினார்கள். இந்த நால்வராலும் தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்குள் ஆபத்தான பிரிவினைக் கோளாறுகள் வந்ததில்லை. ஆனால், தற்போது பாசக பின்பற்றி வரும் மத வெறுப்பு அரசியல், அமைதியாய் இருக்கும் தமிழ்ச் சமூகத்தில் தீப்பிழம்புகளை அள்ளிப்போடும் செயலாகவே தென்படுகிறது.

தமிழரின் தொன்மையறிந்த சிலர், பலராக மாறவில்லை என்றால், தமிழ்ச்சமூகம் பாசக வெறுப்பு அரசியலால் அழிந்து போய்விடும் ஆபத்து இருக்கிறது. நமக்கு, நம்காலங்களில் கிடைத்த கீழடி அகழாய்வுகள் தந்திருக்கும் உண்மைகளின் அடிப்படையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகத்தில் மதமும் இல்லை, சாதியும் இல்லை. இந்த உண்மை பாமர மக்களுக்கும் பகிரப்பட்டு, அவர்கள் அதை உணர்ந்து கொள்ளும் வரையில், செயல்பாடுகளில் தமிழ்ப்பற்று மிக்க ஒவ்வொரு தமிழரும் இறங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

யாரோ ஓரிருவர் வாழ, பெரும்பான்மையினர் ஏமாற்றத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் உள்ளாவது என்பது சமூகத்திற்கு நேரும் புற்றுநோய். ஒவ்வொரு மனிதருக்கும் சரிசமமான உரிமைகள் உண்டு என்பதை தமிழ்ச் சமூகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்து, உலகிற்கு எடுத்தோதி வந்திருக்கிறது என்பதை நான் நினைவில் கொண்டு, அதன் வழியே நாம் செல்ல வேண்டும். அந்த வழியில் மதம், சாதி என்ற பெயர்களில் முட்கள் இடைமறிக்குமானால், அவைகளைப் பொறுக்கி, எரிக்க வேண்டும். சாதியும் மதமும் மனிதர்க்கு தீங்கு விளைவிக்கவில்லை என்றால், அதை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அவைகளால் சமூகம் பாதிக்கப்படும் நிலை வரும் என்றால், அவைகளைக் களைவது அவசியமாகிறது.

யாத்திரை என்ற பெயரில் அரசு விதித்திருக்கும் தடையை மீறுவது சரியானதல்ல. பேரிடரான கொரோனா காலத்தில் பெருங்கூட்டத்தைக் கூட்டுவது தவறு என்றறிந்தும் அதைச் செய்வதும், கைது செய்தால், அதற்கு மறியல் செய்வதும், விடுவித்தால் மறுநாள் யாத்திரையைத் தொடர்வதும் சட்டத்தை மீறும் செயல். அரசு தடை விதித்திருக்கும் போது, அதை மீறுவது சட்டத்திற்குப் புறம்பான செயல் என்பதை அறியாதவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் நாட்டில் குடிமக்கள் எப்படி அமைதியாக வாழ முடியும்?

ஆள நினைப்பவர்கள், மக்கள் நேயர்களாக தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் விரோதச் செயல்களைச் செய்ய நினைப்பவர்கள் ஆள நினைக்கக்கூடாது.



அமெரிக்கா குடியரசுத் தலைவராக ஜோபைடனும், துணை குடியரசுத்தலைவராக கமலா ஹாரிசும் தேர்வு பெற்றுள்ளனர். இவர்களில் கமலா ஹாரிஸ் தமிழக பாரம்பரியத்தை பின்னணியாகக் கொண்டவர். கமலா ஹாரிசின் வெற்றியை தமிழகம் கொண்டாடியது.

ஜோ பைடனுக்கும் உலக வரலாற்றில் நீண்ட நெடிய வரலாறுகளைக் கொண்டிருக்கும் தமிழகத்தோடு தொடர்பு உள்ளதா? என்று இப்போது ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு அமெரிக்காவின் துணை குடியரசுத் தலைவராக இருந்தபோது ஜோ பைடன் முதல் இந்தியப் பயணமாக மராட்டிய மாநிலம் மும்பைக்கு வந்திருந்தார். மும்பை பங்குச்சந்தையில் நடந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய போது, "எனக்கு இந்தியாவில் உறவினர்கள் இருக்கிறார்கள்" என்று கூறினார்.

இதேபோல 1972ஆம் ஆண்டு செனட் சபைக்கு தேர்வு செய்யப்பட்ட சில நாட்களில், மும்பையைச் சேர்ந்த பைடன் என்ற பெயரைக் கொண்ட ஒருவரிடம் இருந்து ஜோ பைடனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், தாங்கள் உறவினர்கள் என்றும், தங்களுடைய மூதாதையர்கள் கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த கடிதத்தில் கூறப்பட்டிருந்த அம்சங்களையும் ஜோபைடன் நினைவுகூர்ந்தார். அப்போது ஜோ பைடனுக்கு 29 வயது. இதுகுறித்து அவர் தகவல் திரட்ட முயன்றார். ஆனால் ஒரு சில காரணங்களால் அதனை செய்ய முடியாமல் போனது.

இதற்கிடையே சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியில் ஜோ பைடன் பேசும்போது, "ஐந்து தலைமுறைக்கு முன்னதாக எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஜார்ஜ் பைடன் கிழக்கிந்திய கம்பெனியில் மாலுமியாக பணியாற்றினார். பின்னர் இந்தியப் பெண் ஒருவரை திருமணம் செய்து கொண்டு, இந்தியாவிலேயே அவர் தங்கிவிட்டார்" என்றார். எனினும் கிழக்கிந்திய கம்பெனியில் ஜார்ஜ் பைடன் பணியாற்றியதற்கான குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், ஜோ பைடனின் குடும்பப் பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியில் கிறிஸ்டோபர் பைடன் மற்றும் அவருடைய தம்பி வில்லியம் ஹென்றி பைடன் ஆகிய 2 பேர் பணியாற்றியதற்கான ஆவணங்கள் மும்பையைச் சேர்ந்த அயலகக் கம்பெனியில் இருக்கிறது. கிறிஸ்டோபர் பைடன் 12 வயது இருக்கும்போதும், அவருடைய தம்பி வில்லியம் ஹென்றி பைடன் 10

# அமெரிக்க குடியரசுத்தலைவருக்கு தமிழகத்துடன் தொடர்பு!



வயதை எட்டுவதற்கு முன்பும் லண்டனில் இருந்து கடல் பயணமாக இந்தியா வந்துள்ளனர்.

கிறிஸ்டோபர் பைடன், வேல்ஸ் இளவரசி சார்லேட் என்ற கப்பலை இங்கிலாந்தில் இருந்து கொல்கத்தாவுக்கு நான்கு முறையும், 'ராயல் ஜார்ஜ்' என்ற கப்பலையும் இயக்கியிருக்கிறார். இதைத் தொடர்ந்து கிறிஸ்டோபர் பைடன் இந்தியாவில் தங்கிவிட்டார். தொடர்ந்து சென்னையில் அனைவரும் அறியப்பட்ட நபராகவும் மாறினார். 1830ஆம் ஆண்டு இவர் 'கடற்படையில் கண்ணியம்' என்ற புதினத்தை எழுதினார்.

மக்களிடம் நம்பிக்கையை விதைத்து, தங்கள் உரிமைகளுக்கு மதிப்பளிக்கச் செய்வதும், மக்களை மரியாதையோடு நடத்துவதும் தான் கிறிஸ்டோபர் பைடனின் சிந்ததாந்தம் ஆகும். கிறிஸ்டோபர் பைடன், ஹாரியத் பிரீத் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் தம்பத்திக்கு ஹொராசியோ என்ற மகனும், 2 மகள்களும் இருந்தனர். ஆனால் துரதிருஷ்டவசமாக ஒரு மகள் கடல் பயணமாக இந்தியாவுக்கு வரும் வழியில் இறந்துவிட்டார்.

கிறிஸ்டோபர் பைடன் 19 ஆண்டுகள் சென்னையில் இருந்தார். அப்போது ஆதரவற்றவர்கள், இந்தியர்கள் உட்பட மரணம் அடைந்த மாலுமிகளின் மனைவிகளின் நலனுக்காக இரக்கத்தோடும், அக்கறையோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்பட்டார். இதனால் அவர் அனைவராலும் நன்கு அறியப்பட்டிருந்தார்.

1858ஆம் ஆண்டு கிறிஸ்டோபர் பைடன் சென்னையில் மரணம் அடைந்தார். அவருடைய கல்லறை மற்றும் நினைவுக் குறிப்பு ஆகியவையும், செல்ல நாயுடன் அவர் இருப்பது போன்ற புகைப்படமும் சென்னை கதீட்ரல் தேவாலயத்துக்குப் பின்புறம் உள்ள கல்லறைத் தோட்டத்தில் இருக்கிறது. சென்னை அருங்காட்சியகத்தின் கல்லறைகளின் குறிப்புகள் அல்லது சென்னை நினைவுச் சின்னங்களின் பட்டியலில் கிறிஸ்டோபர் பைடனைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்டோபர் பைடனின் மகன் ஹொராசியோ சென்னை ராணுவத்தில் கர்னல் ஆக பணியாற்றி இருக்கிறார்.

ஹொராசியா மற்றும் அவருடைய சகோதரி சென்னையில் திருமணம் செய்து கொண்டு எங்கேயாவது வசித்து வந்தார்களா? என்று ஆராய்ச்சியாளர்கள் தேடி வருகிறார்கள். அந்த வகையில் ஜோ பைடனின் மூதாதையர்கள் தமிழகத்தில் வசித்து வந்தார்களா? என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்றாக உள்ளது. ஜோ பைடன் கூறியவாறு அவருடைய மூதாதையர்கள் பைடன் என்ற குடும்பப் பெயருடன் கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றியிருந்தால், அதில் கிறிஸ்டோபர் பைடன் நிச்சயம் ஒரு தேர்வாக இருப்பார் என்று கருதப்படுகிறது.




சென்னை, அயனாவரத்தில் உள்ள ஆங்கிலோ இந்தியன் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஹாரி மேக்லூர் கூறியதாவது: இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் பைடன் மற்றும் கிறிஸ்டோபர் பைடன் என்ற இரண்டு சகோதரர்கள் 1818ஆம் ஆண்டு சென்னை வந்து கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றினார்கள். இதில் வில்லியம் பைடன் உடல்நலக்குறைவு காரணமாக ஒரு சில ஆண்டுகளிலேயே இறந்துவிட்டார். வில்லியம் பைடன் மற்றும் கிறிஸ்டோபர் பைடன் ஆகியோர் தங்களது இளம் வயதிலேயே இந்தியாவிற்கு வந்து உள்ளனர். வரலாற்றில் வில்லியம் பைடனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருந்து இருக்கிறார்கள்.

வில்லியம் பைடனின் மகன் இராணுவத்தில் கர்னலாகப் பணியாற்றியதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவருடைய மகள் பற்றி குறிப்புகள் இல்லை. அவருடைய மகன் வழி வாரிசுப் பெண்களோ, மகளோ, மகள் வழி வாரிசுகளோ ஆங்கிலேயர்களையோ, ஆங்கிலோ இந்தியர்களையோ, இந்தியர்களையோ திருமணம் முடித்து இருந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு பைடன் என்ற பெயர் வர வாய்ப்பு இல்லை. எனவே தான் இங்குள்ள ஆங்கிலோ இந்தியன் சமூகத்தில் உறுப்பினராக பைடன் என்று யாரும் இல்லை என்று கூறினார்.

நன்றி : **தினத்தந்தி**

## இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் முதல்வர் தொடங்கி வைத்தார்



உதவித்தொகை சட்டப்படிப்பினை முடித்து கல்லூரியில் இருந்து வெளி வரும் இளம் வழக்கறிஞர்கள் பார் கவுன்சிலில் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கு முதலில் தேசிய அளவிலான வழக்கறிஞர்கள் குழுமத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அதன்பின்னர் இளநிலை வழக்கறிஞராக மூத்த வழக்கறிஞர் ஒருவரிடம் இரண்டு அல்லது மூன்று ஆண்டு காலம் பயிற்சி பெற வேண்டும். கிராமப்புற மற்றும் ஏழ்மை யான குடும்பத்தில் இருந்து சட்டப்படிப்பு படிக்கும் மாண வர்கள் சட்டப்படிப்பினை முடித்து விட்டு அவர்கள் வழக்கறிஞர் களாகப் பணியாற்றுவதற்கு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் தேவைப்படுகிறது.

இக்கால கட்டத்தில் பல வழக்கறிஞர்கள் மிகவும் வறுமை யான நிலையில் உள்ள தோடு ஒருசிலர் தங்களை வழக்கறி ஞர்களாக நிலைநிறுத்திக் கொள்ள இயலாமல் வேறு மாற்றுத் தொழிலுக்குச் சென்று விடும் நிலையும் உள்ளது. இந்நிலை யினை கருத்தில் கொண்டு, முதலமைச்சர் எடப்பாடி பழனிச் சாமி வறுமையான நிலையில் உள்ள இளம் வழக்கறிஞர் களுக்கு உதவிடும் வகையில் தகுதிகளின் அடிப்படையில், இளம் வழக்கறிஞர்களுக்கு மாதம் மூன்றாயிரம் வீதம் இரண்டு ஆண்டுகாலத்திற்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி சட்டப்படிப்பு முடித்த இளம் வழக்கறிஞர்கள் பயன்பெறும் வகையில் இரண்டு ஆண்டு காலத்திற்கு மாதம் மூன்றாயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை முதல்வர் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார். மேலும் திட்டத்தின் அடையாளமாக ஒன்பது இளம் வழக்கறிஞர்களுக்கு, உதவித்தொகைக்கான ஆணையினை வழங்கினார்.

இந்த நிகழ்வில் துணை முதல் அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம், அமைச்சர் சி.வி.சன்முகம், தலைமைச் செயலாளர் க. சன்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புலிகள் மீதான தடை நீங்கும்!



எந்தவிதமான பயங்கரவாத செயற்பாடுகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று பிரித்தானியாவின் உள்துறை அமைச்சகத்திடம் 2008ஆம் ஆண்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் தொடுக்கப்பட்ட வழக்கில், விடுதலைப்புலிகள் மீது இங்கிலாந்தில் விதிக்கப்பட்ட தடை தவறானது என்று பிரிட்டானியா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கிறது.

திறந்த சாட்சியங்களின் அடிப்படையிலும், இரகசிய சாட்சியங்களின் அடிப்படையிலும் இத்தீர்ப்புக் கிடைத்திருக் கிறது. 38 பக்கத் தீர்ப்பின்படி விடுதலைப்புலிகள் மீதான தடை தவறானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பையும், இது தொடர்பான பரிந்துரையையும் நீதிமன்றம் பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைக்கும். அதன் அடிப்படையில் பிரித்த ானிய அரசாங்கம் தனது முடிவை சில வாரங்களில் அறிவிக்கும் எனத் தெரிகிறது.

இந்தத் தீர்ப்பின் தொடர்ச்சியாக, விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் என்று இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் அறிவிக்கும் எனவும் எதிர்பார்க் கப்படுகிறது.

## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**

**பின்னட்டை ரூ. 15,000/- (முழுப்பக்கம்)**

**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

9

## திரைக்கதை வசனம்

பூவை தயா



சென்னை இராயப்பேட்டை வி.எம்.தெருவில் நாடகங்களுக்கு சீன்செட் அமைக்கும் 'உஷா ஸ்டேஜ்' என்ற பெயர் கொண்ட கம்பெனி குடோன் அந்தத் தெருவில்தான் இன்றுவரை உள்ளது. கடந்த காலத்தில் 'சேவா ஸ்டேஜ்' திரு. சகஸ்ரநாமம் அவர்களின் நாடகங்களுக்கும் 'உஷா ஸ்டேஜ்' தான் சீன்செட் அமைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. நான் சந்தித்த காலத்தில், என்.ஆர்.முரளி அவர்களும் அதற்குப் பின்னர் இன்று அவரது சகோதரரும் அந்தப் பணியைச் செவ்வனே செய்து வருகிறார்கள்.

அந்தக் குடோனில் நாடகத்திற்கான கட்அவுட், படுதா, மற்றும் மரச்சட்டங்கள் என்று பல பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பொருட்களோடு பொருட்களாக அதிலே பணி புரிபவர்களும் படுத்திருப்பார்கள். குறைந்தது ஐந்து பேர் இருக்கலாம். சேட்டாரவி, மூர்த்தி, பஷீர், மதுரை கண்ணன், வண்டுராதா என இந்த ஐந்து பேரும் எனது இனிய நண்பர்களாகவார்கள்.

இவர்களில் வண்டுராதா நல்லதொரு சமையற் கலைஞர். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அருமை யான நாடகக்கலைஞர். எனது நாடகங்களில் குணச் சித்திர வேடமேற்று நடித்து, ரசிகர்களின் பாராட்டு தலைப் பெற்றவர். அவரை நான் சந்தித்த நாள்முதல் என்னிடம் அவர், சித்தர்கள், முனிவர்கள், தவயோகி களைப் பற்றி மட்டும் பேசுவார். அவரது சிந்தை முழுவதும் சித்தர்களே நிறைந்திருந்தனர் என்பதை நான் நன்கு அறிவேன். அவருக்கு மயிலை பஜார் வீதியில் ஃபேன்ஸி ஸ்டோர் வைத்திருக்கும் ஒரு இளம் வயதுக்காரர் நல்ல பழக்கமானார். அந்த நபருக்கு சினிமா படம் எடுக்க வேண்டும், அதில் தானே நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியிருந்தது. அதன் பொருட்டு வண்டுராதா என்னை அவரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். அவரும் தான் ஒரு படம் சொந்தமாக தயாரிக்கப் போகிறேன். அப்படித்தின் இயக்குனரும் கதாநாயகனும் நானே என்றவர்... படத்திற்கான மூலக்கதையை வள்ளுவ னாரின் குறள்போல இரண்டே வரிகளில் சொல்லி முடித்தார்.

அதற்குமேல் அதை விரிவாகச் சொல்ல அவருக்குத் தெரியவில்லை. "தயாசார், நான் சொன்ன சின்னக் கருவை வச்சு, கிளைக்கதை, துணைக்கதைன்னு நீங்க சேர்த்து, ஒரு அருமையான திரைக்கதை வசனத்தை உங்களால நிச்சயம் தரமுடியும். உடனே எழுத ஆரம்புயுங்க. உங்க நண்வர் வண்டு ராதாவுக்கு இதன் மூலமா நிச்சயம் ஒரு நல்ல எதிர்காலம் அமையும் நம்புங்க" என்றார். நானும் சம்மதித்துவிட்டு வெளியே வந்து விட்டேன். ஒரு இருபது நிமிடங் களுக்குப் பின்னால் நண்பர் வண்டுராதா வெளியே வந்தார். அவர் என்னைப் பார்த்த பார்வையில் நான் எல்லாம் புரிந்து கொண்டேன். "வண்டு கவலை வேண்டாம். உனக்கு இதுல ஒரு நல்ல எதிர்காலம் இருக்கும்னா... என் எதிர்காலச் சிந்தனையை ஓரம் வச்சுடுறேன். முதல்ல இதை சிறப்பா எழுதித்தர்றேன் சந்தோஷமா?" என்று கேட்டேன்.

"சந்தோஷம்தான், ஆனா அவரு 'ரூம்' எல்லாம் போட்டுத்தரமாட்டாரு, என்றார். "நான் ரூம் கேக்க வேயில்லையே வண்டு, நீ ஏன் வருத்தப்படுறே.. இருக்கவே இருக்கு தீவுத்திடல் பொருட்காட்சி. தினமும் அங்கே போவோம் எவ்வளவு சீக்கிரமா எழுத முடியுமோ அவ்வளவு சீக்கிரமா எழுதித் தர்றேன்" எனக் கூறினேன்.

தினமும் அவர் கூறிய ஒண்ணே முக்காலடி மூலக் கதையை அசைபோட்டு அசைபோட்டு மனதிற்குள் ஒரு முழு வடிவத்தைத் தயார் செய்தேன். நன்றாக கவனியுங்கள். முழுவடிவத்தை தாயர் செய்தேன்.

ஆக ஒரு கதையை செய்யும் சூட்சமத்தை கற்றுக் கொண்டிருந்தேன். எதை எழுதுவதென்பதெல் லாம் இறந்த காலம். இப்போது கதை சொல்வதுதான் நிகழ் காலம். அப்படி செய்யும் கதைகளும் அதிக வரவேற் பைப் பெற்று விட்டிருந்தது. ஆனாலும், இது எதிர் காலத்தில் நிலைத்து நிற்குமா என்ற கேள்வி

எல்லோரிடமும் இருந்தது. இருக்கிறது. எது எப்ப டியோ கதை செய்வதற்கும் ஒரு திறமை தேவைப்படு கிறது.

மனிதனுக்கு மன உளைச்சல் பெருகப் பெருக, சிந்தனை குறைந்து விடுகிறது. சிந்தனை குறையக் குறைய எதிலும் தெளிவற்றுப் போய் விடுகிறது. இது நிதர்சனமான உண்மை. ஒரு வழியாக தினமும் தீவுத்திடல் சென்று வெறும் டீ, காபி சாப்பிட்டே இருபத்தைந்து நாட்களில் ஸ்கிரிப்ட் ரெடியானது.

ஸ்கிரிப்ட் ரெடியான மறுநாள் மாலை, நானும் நண்பரும் அந்த ஃபேன்ஸி ஸ்டோர் நண்பரிடம் கதையை கொடுக்கச் சென்றோம். கடைவாசல் வந்ததும் எனது நண்பர் வண்டு ராதா என்னை வெளியேவே நிற்கச் சொல்லிவிட்டு ஸ்கிரிப்டை எடுத்துச் சென்றார். ஒரு இருபது நிமிடம் கழித்து அவர் மட்டும் வந்தார். எனக்குப் பெருத்த ஏமாற்றம். எதனால் என்றால் அந்த நண்பர் என்னை அழைத்துப் பாராட்டி, நன்றி கூறுவார் என்றிருந்தேன். எனது நண்பரோ என்னிரு கரங்களைப் பற்றிக் கொண்டு “தயா, எதையும் தவறா எடுத்துக்காதீங்க இது நீங்க எனக்காகச் செய்திருக்கீங்க... நான்தான் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கேன்” னு சொல்லி சட்டைப் பையிலிருந்து நான்கு நூறு ரூபாய் நோட்டுகளை என்னிடம் கொடுத்தார்.

நான் பெரிதாக எதிர்பார்க்கவுமில்லை இவ்வளவு சிறிதா கவும் எதிர்பார்க்கவில்லை. அந்த நேரம் இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று ஏனோ நான் கூறாமல் விட்டதை பிறகு எண்ணி வருந்தினேன். அதன் பின்னர் நான் அவரிடம் கூறியது “வண்டு... ஸ்கிரிப்ட் எப்படி வந்திருக்குன்னு என்னால சொல்ல முடியாது, படிச்சுப் பாத்து அவருதான் சொல்லணும். இவ்வளவு சிரமப்பட்டு எழுதிக் குடுத்ததுக்கு ஒரு நன்றி கூட சொல்லதவரு... ஸ்கிரிப்ட் நல்லாயிருக்குன்னு சொல்லவா போறாரு? சரி... திரைக்கதை வசனம்னு என் பேரையாவது நல்லா போடச் சொல்லுங்க” ன்னு சொன்னதும், என் நண்பர் தலையைச் சொறிந்தார். என்னை வேண்டுவதைப் போல் பார்த்து, “தயா, மன்னிக்கணும் இந்தப் படத்தைப் பொறுத்தவரைக்கும் எல்லாமே அவர் பேர்லதானாம். முதல்லேயே இதைச் சொன்னாரு நான்தான் சொல்ல மறந்துட்டேன்” அப்படின்னு சொன்னதும் ஒரு பத்து நிமிசம் எதுவும் பரியாமல் நின்றேன்.

1993இல் ஒரு படத்திற்கான திரைக்கதை வசனத்திற்கு 400 ரூபாய் வாங்கியவன் நானாகத்தான் இருப்பேன் என்று என்னை நானே நொந்து கொண்டேன். எனது பெயரும் இடம் பெறாது என்று சொன்னபோது மிக சராசரி மனிதனாக நண்பன் மீது கோபம் கொண்டு இரண்டொரு வார்த்தை கடுமையாகப் பேசி விட்டேன். அப்படி கடுமையாகப் பேசிய பின்னர்தான் மனம் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்தது. கோபம் கொண்டு பேசியதற்கு மன்னிப்புக் கேட்டேன். இருவரும் டீக்கடைக்குச் சென்று ‘டீ’ சாப்பிட்டோம். “சரி வண்டு, இது உனக்காக நான் செய்த உதவி, பயன்படுத்திக்க... உன்னையும் ஏமாத்திடப் போறாரு பார்த்துக்க” என்று கூறி நான் விடை பெற்றேன்.

ஒரு சில மாதங்கள் ஓடின. நான் நண்பர் ‘வண்டு’ வை தேடிச் சென்றேன். அவர் சக சாமியார்களுடன் சேர்ந்து வள்ளிமலைக்குச் சென்றுவிட்டார். இனி சென்னைப்பக்கம் வரமாட்டார் என்று, வாடா போடா என்று அவரை அழைத்த நண்பர், பன்மையில் பேசியதில் உண்மையை அறிந்து கொண்டேன். இவர் இந்த முடிவை ஒருநாள் எடுப்பார் என்று நான் கணித்துதான் இருந்தேன்.

அது இவ்வளவு சீக்கிரம் நடக்குமென்று நான் துளியும் எதிர்பார்க்கவில்லை. அதன் பின்னர் நான் அவருக்காகவும் அவரது நண்பருக்காகவும் எழுதிய கதையைப் பற்றிய நினைப்பிலிருந்து வெளியேறி விட்டேன்.

எனது கதை திரைப்படமாக வந்ததா, வரப்போ கிறதா, அல்லது இல்லையா எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அறவே போய்விட்டது. இதன் பின்னர் எனது மற்றொரு நண்பர் புதிய படம் எடுப்ப தற்கான முயற்சியில் இறங்கினார். கோடம் பாக்கத்தில் ‘ரூம்’ போட்டு ‘டிஸ்கசன்’ நடைபெறப் போவதாகவும் நான் உடனே வந்து டிஸ்கசனில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் ஒரு துண்டுச் சீட்டில் எழுதி, வீட்டில் கொடுத்துவிட்டு போயிருந்தார். (அப்போது போன் வசதி கிடையாது) நான் வெளியே சென்று வீட்டிற்கு வந்ததும் எனது தாயார் பெரிய மகிழ்ச்சி யுடன் அந்த துண்டுச் சீட்டைக் கொடுத் தார்கள். வாங்கிப் பார்த்தவுடன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கோடம்பாக்கம் புறப்பட்டேன். ரூமிற்குச் சென்றேன் டிஸ்கசனில் கலந்து கொண்டேன். தொடர்ந்து ஒரு வாரம் டிஸ்கசன். கதை ஒரு முடிவிற்கே வரவில்லை. இயக்குனர் மட்டும், தான் சொன்னது தான் கதை இதை மாற்றிக் கொள்ளமாட்டேன் என்று அவரும் ஒரு முடிவிற்கு வந்திருந்தார். நான் அவரிடம் அமைதியாகவே கேட்டேன்.

“நீங்கள் எவருடைய கருத்தையும் ஏற்கவில்லை. பிறகு எதற்கு டிஸ்கஷன்? நீங்கள் மட்டுமே முடிவெடுத்து படமெடுத்து வெளியி டுங்கள்” என்றேன். மேலும் ஒன்றைச் சொன்னேன். முட்டாள்களோடு இருந்துகூட பணியாற்றிவிடலாம், அறிவாளிகளாய் நடிப்பவர்களோடு ஒரு காரியமும் செய்து வெற்றி பெற இயலாது என்றேன். உடனே அவர் “அறிவாளி யார்? முட்டாள் யார்? தெளிவாய் சொல்லுங்கள் தயா” என்றார். “படத்தை எடுங்கள், வெளியிடுங்கள், மக்கள் பார்த்த பின் உங்கள் கேள்விக்கான பதில் கிடைக்கும்” என்று கூறி அங்கிருந்து வேகமாய் நடையைக் கட்டினனேன்!

**பயணம் தொடரும்...**

## தீபாவளி - தமிழர் விழா அல்ல !

– பேராசிரியர் தொ. பரமசிவன்

இன்று தமிழ்நாட்டில் விறுவிறுப்பாகக் கொண்டாடப் பெறும் திருவிழா தீபாவளி. நகர்ப்புறம் சார்ந்ததாகவும், துணி, எண்ணெய், மாவு, பட்டாசு ஆகிய பெருந் தொழில்களின் பொருளாதாரம் சார்ந்த தாகவும் இத்திருவிழா கொண்டாடப்படு கிறது. தகவல் தொடர்புச் சாதனங்கள் தரும் பகட்டான விளம்பரங்களால், இது தமிழர்களின் தேசியத் திருவிழா போலக் காட்டப்படுகிறது. ஆயினும் தைப் பொங்கல் திருவிழா போல மரபுவழிப் பொருளாதாரம் சார்ந்ததாகவும் ஒரு திருவிழாவிற்குரிய உள்ளார்ந்த மகிழ்ச்சியோடும் சடங்கு களோடும் கொண்டாடப் பெறுவதாகவும் தீபாவளி அமைய வில்லை.

தைப் பொங்கல் சமய எல்லையினைக் கடந்து நிற்கும் திருவிழா. இது பழந்தமிழரின் அறுவடைத் திருவிழா. எனவேதான் இன்று ரோமன் கத்தோலிக்கத் தேவாலயங் களில் கூடத் தைப் பொங்கல் கொண்டாடப் பெறுகிறது.

ஆனால் தீபாவளி தமிழரின் திருவிழாவாக அமையாமல் இந்துக்களின் திருவிழா வாக அமைகிறது. தமிழர் திருவிழா – இந்துக்களின் திருவிழா என்ற வேறுபாட்டினை எவ்வாறு பிரித்தறிவது?

பழைய வழிபாட்டு முறைகளோடு கூடிய தொல் சமய வழிபாடுகள், இவற்றின் சாரத்தையும் உள்வாங்கிக் கொண்டு வளர்ந்த சைவம், வைணவம் ஆகியவையே தமிழர்களின் பழைய மதங்களாகும். இவை காட்டும் திருவிழாக்களான கார்த்திகைத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, மாசிக்களரி எனப்படும் சிவராத்திரித் திருவிழா, பங்குனி உத்திரம், சித்திரைப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு ஆகியன சைவமும் வைணவமும் பெருஞ்சமயங்களாக நிலை பெறுவதற்கு முன்னரே தமிழர் கள் கொண்டாடிய திருவிழாக்களாகும். பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் இவை சைவ வைணவ மதங்களாலும் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன.

தீபாவளி, தமிழ்நாட்டின் மரபு வழிப் பொருளாதாரத் தோடும் பருவ நிலைகளோடும் சடங்குகளோடும் தொடர்பில் லாத ஒரு திருவிழா.

பார்ப்பனியத்தின் பாதிப்புகளில் இருந்து இன்னமும் விலகி நிற்கிற சிற்றூர்களில் தீபாவளி கொண்டாடப் படுவதில்லை. தீபாவளியின் அடை யாளமான வெடி, அதன் மூலப் பொருளான வெடி மருந்து ஆகியவை தமிழ்நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்றாண்டுவரை அறிமுகமாகவில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

விளக்குகளின் வரிசை எனப் பொருள்படும் தீபாவளி (தீப+ஆவளி) என்னும் வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லும் புழக்கத்தில் இல்லை. தமிழர்களின் விளக்குத் திருவிழா என்பது திருக்கார்த்திகைத் திருவிழாவே.

நரகாசுரன் என்னும் அரக்கன் கிருஷ்ணனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும். தீபாவளிக் கதை திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக பிராமணிய மதத்தின் சார்பாக எழுந்த கதையாகும்.

# கொரோனா டிப்ஸ்

ஊரடங்கில் வெளியே வரக்கூடாது என்பது உண்மை தான். அதற்காக ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டு மென யார் சொன்னது. உடலில் சுறுசுறுப்பு இருந்தால்தால் உள்ளத்தில் உற்சாகமும் உடல் ஆரோக்கிய மாகவும் இருக் கும் என்கிறார் டாக்டர் ஷரத் சர்மா. மும்பையின் வாஷியில் உள்ள ஹிரானந்தனி மருத்துவ மனை லாபரோஸ்கோபிக் சர்ஜன் ஆவார்.

கரோனா வைரஸ் பரவலைக் கட்டுமுப்படுத்தவே ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அது ஒவ்வொருவரையும் சுயதனிமைக்கு தள்ளியது முடங்கிகிடப்பதற்கல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சோம்பலினால் பலரும புதியதாக எதற்கு சமைக்க வேண்டும் என்று பதப்படுத்தப்பட் உணவை நாடுவதுண்டு. அதிக அளவு சோடியத்துடன் கூடிய நாட்பட்ட உணவை உட்கொள்வதால் எடை அதிகரிப்பதை ஒருவர் கவனிக்கலாம் என்கிறார் அவர்.

சரியான ஊட்டச்சத்து மற்றும் நீர்ச்சத்து மிக முக்கியம். நன்கு சீரான உணவை உட்கொள்பவர்கள் ஆரோக்கிய மானவர்கள் மற்றும் வலுவான நோயெதிர்ப்பு சக்தியை உருவாக்க முடிகிறது. ஆரோக்கியமான உணவு நாள்பட்ட நோய்கள் மற்றும் தொற்று நோய்களின் அபாயத்தை கட்டுப்படுத்துகிறது.

உடலுக்குத் தேவையான வைட்டமின்கள், தாதுக்கள், டயட்டரி ஃபைபர், புரதங்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் தேவைப்படுவதற்கு ஒவ்வொரு நாளும் பலவிதமான புதிய மற்றும் பதப்படுத்தப்படாத உணவுகளை சாப்பிட வேண்டும்.

முழு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளை உட் கொள்ளுங்கள் – இது நீரிழிவு நோயின் அபாயத்தையும் குறைக்கிறது. போதுமான தண்ணீர் குடிக்கவும் – ஒரு நாளைக்கு குறைந்தது 5 லிட்டர். அதிக எடை மற்றும் பருமனான உங்கள் அபாயத்தை கணிசமாகக் குறைக்க சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு ஆகியவற்றைத் தவிர்க்க வும்.

சர்க்கரை இனிப்பு பானங்கள் & குளிர்பானங்கள் தவிருங்கள், எண்ணெய் அதிகமுள்ள உணவை சாப்பிட நேர்ந்தால் மிகக் குறைவாகவே எடுத்துக்கொள்ளுங்கள்.

ஊரடங்கில் வெளிப்புற இயக்கங்களை தடைசெய்துள்ள நிலையில், எல்லா வயதினரும் முடிந்தவரை சுறுசுறுப்பாக இருப்பது முக்கியம். வீட்டுக்குள்ளேயே தங்கியிருக்கும்போது எல்லா நேரத்திலும் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டாம். ஒரு பக்க மாக சாய்ந்துகொண்டு இருப்பதையும் தவிர்க்கவும்.

ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும், 3–5 நிமிடங்களுக்கு நகரவும்; நடைபயிற்சி அல்லது கைகால்களை நீட்டி மடக்க வேண்டும் – இது தசையின் அழுத்தத்தைக் குறைக்கவும், எந்தவிதமான மன அழுத்தத்தையும் போக்கவும், உடலில் ரத்த ஓட்டத்தை சீராக வைத்திருக்கவும் உதவும்.

நீங்கள் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருந்தால் தசை செயல்பாடு அதிகரிக்கிறது, விரைவான எடை அதிகரிக்கும் அபாயத்தையும் குறைக்கிறது. மேலும் தீவிரமான உடற் பயிற்சிகள் வீட்டிலேயே சுறுசுறுப்பாக இருக்க சிறந்த வழிகளில் முக்கியமானது.

# சகாயம் ஐ.ஏ.எஸ். ராஜினாமா?

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர் உ.சகாயம். 1962ஆண்டு சூலை மாதம் 3ஆம் நாள் பிறந்த சகாயம் எம்.ஏ., பி.எல்., பட்டப்படிப்புகளைப் படித்தார். ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்று, 2001ஆம் ஆண்டு தமிழக அரசுப்பணிக்கு வந்தார்.

நாமக்கல், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவராக அவர் பணியாற்றியுள்ளார். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் முக்கியப் பொறுப்புகளில் இருந்திருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்தபோது கிரானைட் கனிமவள முறைகேட்டை வெளியே கொண்டு வந்தார். பின்னர் கோஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குனர், இந்திய மருந்து, ஓமியோபதி இயக்குனர் போன்ற பொறுப்புகளுக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், இளைஞர்களிடையே நேர்மையை வலியுறுத்தி பல சொற்பொழிவுகளை சகாயம் நடத்தினார். ஊழலுக்கு எதிரான அவரது பேச்சு, பல தரப்பினரையும் வெகுவாகக் கவர்ந்தது. எனவே அரசியல் கட்சியை சகாயம் தொடங்க இருப்பதாக பேச்சுகள் எழுந்தன. 2014ஆம் ஆண்டு கிண்டியில் உள்ள அறிவியல் நகர துணைத் தலைவராக சகாயம் நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு அவருக்கு பணியிடமாற்றம் எதுவும் அளிக்கப்படவில்லை. இந்த நிலையில் கடந்த அக்டோபர் இரண்டாம் நாள் விருப்ப ஓய்வு பெற விரும்புவதாக தமிழக அரசுக்கு சகாயம் கடிதம் அளித்தார். ஆனால் அரசிடம் இருந்து இன்னும் பதில் கடிதம் அளிக்கப்படவில்லை. எனவே அரசுக்கு சகாயம் நினைவூட்டல் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து சகாயத்திற்கு நெருக்கமானவர்கள் கூறியதாவது: கடந்த ஏழு ஆண்டுகளாக சமூகத்திற்கு அதிகமான பங்களிப்புச் செய்யும் வகையிலான துறைகள் எதுவும் சகாயத்திற்குக் கொடுக்கப்பட வில்லை. இந்த ஆதங்கம் அவருக்கு இருந்தது. சமூகத் திற்குச் செய்ய வேண்டிய பங்களிப்புக்கான உரிமைகூட எனக்கு மறுக்கப்பட்டுள்ளது, என்று தனது விருப்பு ஓய்வுக் கடிதத்தில் சகாயம் குறிப்பிட்டு இருக்கிறார்.

சகாயம் அவர்கள் ஓய்வு பெறுவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் உள்ளன. அவருக்கும், அவர் பணிக்குச் சேர்ந்த அதே கால கட்டத்தில் ஐ.ஏ.எஸ். பதவிக்கு வந்த அதிகாரிகளுக்கும் வரும் சம்பளம், இளைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைவிட குறைவாக இருந்தது. இதை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து சம்பள திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், மற்றவர்களுக்கு திருத்தப்பட்ட சம்பளம் கிடைத்தது. சகாயத்திற்கு இன்னும் திருத்தப்பட்ட சம்பளம் கொடுக்கப்படவில்லை.

தமிழ் பற்றாளராக இருக்கும் அவருக்கு, வெளி நாடுகளுக்குச் சென்று தமிழ் அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளில் பங்கேற்க அரசு அனுமதிக்க வில்லை என்ற வருத்தமும் சகாயத்திற்கு உள்ளது. அந்த வகையில் தனது சமூகநீதியான செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக கருதியதால்தான், பணியில் இருந்து அவர் விருப்ப ஓய்வு கேட்டுள்ளார்.

இனி இளைஞர்களுக்கு வழிகாட்டும் சமூகப் பணியில் சகாயம் முழுமையாக ஈடுபட இருப்பதாகவும், அரசியலுக்கு அவர் வருவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் கூறப்படுகிறது. தனக்கு விருப்பு ஓய்வு தர வேண்டும் என்று அரசுக்கு நினைவூட்டல் கடிதம் எழுதியுள்ளார்.




ஏறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தெற்கு மெக்சிகோவில் உள்ள ஒரு குகையில் தன் வாழ்க்கையை முடித்த பெண்ணின் மண்டை ஓடு அமெரிக்க ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இவரது மண்டையோடு மற்றும் குறுகிய எலும்புகள் இவரின் கடினமான வாழ்க்கை மற்றும் வரலாற்றை வெளிப்படுத்துகிறது. இவர் முதல் அமெரிக்கரா என்று விஞ்ஞானிகள் ஐயம் எழுப்புகின் றனர். முதல் அமெரிக்கர்களின் வரலாறு பற்றிய துப்புகளையும் இந்தப் பெண்ணின் எலும்புக் கூடுகள் விவரிக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

விஞ்ஞானிகள் சுமார் பன்னிரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் ஆசியாவை வட அமெரிக்காவுடன் இணைக்கும் ஒரு நிலப் பாலத்தைப் பயன்படுத்திக் கடந்ததாகக் கருதுகின்றனர். அதுமட்டு மின்றி இன்னும் சில உண்மைகளையும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கும் நேரத்தில் மற்றொரு குழு, யுகடான் பெனின்சுலாவில் உள்ள சிங்ஹோல் குகைகளில் ஒரு டீனேஜ் பெண் உட்பட ஒன்பது நவீன பூர்வீக அமெரிக்கர்களின் எலும்புக் கூடுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மனிதர்கள் ஏற்கனவே சுமார் பன்னிரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் தெற்கே வந்துவிட்டதைக் குறிக்கிறது. சான்ஹோல், என்ற யுகடான் குகை மேப்பிங் கண்டு பிடிப்பாளர்கள், இந்தப் பெண்ணின் எலும்புக்கூட்டை உப்புநீர் கலந்த குகையிலிருந்து கண்டுபிடித்துள்ளனர். உப்புநீரில் அதிக நாட்கள் இருந்ததால் வழக்கமான வயது கண்டுபிடிக்கும் ரேடியோகார்பன் டேட்டிங் முறைகளைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. உப்பு நீர் எலும்புகளிலிருந்த கொலாஜனை குறைத்து விட்டது.

# பத்தாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட மண்டை ஓடு



இருந்தும் விஞ்ஞானிகள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. புதிய முயற்சியை மேற்கொண்டு பெண்ணின் எலும்பிலிருந்த ஸ்டாலாக்டைட்டுகளி லிருந்து, கால்சைட் தாதுவைப்புகளில் காணப்பட்ட குறைந்த அளவு யுரேனியம் மற்றும் தோரியம் அளவை வைத்து, பெண்ணின் எலும்புக்கூடு, குறைந்தது ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரம் வயது இருக்கும் என்று கண்டுபிடித்துள்ளனர்.

அதுமட்டுமின்றி, அந்தப் பெண் இறக்கும்போது வயது முப்பதிற்குள் இருக்கும் என்றும், சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு, உணவு கட்டுப்பாட்டுடன் வாழ்ந்ததாக அவர் பல் துவாரங்கள் மூலம் கண்டுபிடித் துள்ளனர். அந்தப் பெண் எப்படி மரணமடைந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், பல ஆண்டுகளாக, அவர் மூன்று மண்டைக்காயங்களுடன் உயிர் வாழ்ந்துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்த மூன்று மண்டைக்காயங்களுமே குணமடைந்த தைத் தடங்கள் காட்டுகிறது. மேலும் பாக்டீரியா தொற்று நோயால் இந்தப் பெண் பாதிக்கப்பட்டிருந் தார் என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்தப் பெண்ணின் மண்டையோட்டுடன், இதற்கு முன்பு மெக்சிகோவில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டை ஓட்டை ஒப்பிடுகையில் இரண்டும் தனித்துவமானதாக இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஆகையால் சுமார் பன்னிரெண்டாயிரம் முதல் எட்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பு மெக்சிகோவில் இரண்டு விதமான மனித குலங்கள் வாழ்ந்து வந்துள்ளது உறுதியாகியுள்ளது.

இரண்டு மனித மண்டை ஓடுகளும் வெவ்வேறு புவியியல் தோற்றங்களைக் கொண்டிருந்துள்ளது. மேலும் மெக்சிகோவில் காணப்பட்ட எலும்புகளின் மரபணு ஆய்வுகள் இவர்கள் வெவ்வேறு சூழ்நிலையில் சூழல்களுக்கு விரைவாகத் தழுவி வாழ்ந்துள்ளனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

**முகநூல் பதிவு.**

மொபைல் டேட்டா பயன்பாடு: உங்கள் ஸ்மார்ட் போனில் உளவுக்கருவிகள் உங்களுக்கே தெரியாமல் இணைக்கப்பட்டிருந்தால் அதிக டேட்டா பயன்பாடு இருக்கும். உஷாராக எந்தளவு உங்கள் பயன்பாடு உள்ளது என்பதைக் கண்டறியுங்கள். மேலும் உங்கள் போன் ஹேக் செய்யப்பட்டு இருந்தால் டேட்டா அதிகமாக செலவழியும். கூகுள் தரும் டெட்டாலி எனும் செயலி உங்களது இணைய பயன்பாட்டைக் கணித்துச் சொல்லும்.

மெதுவான செயல்திறன்: உங்கள் மொபைல் அடிக்கடி ஹாங் ஆனாலோ அல்லது மெதுவாகச் செயல்பட்டாலோ நீங்கள ஹேக்கர்களின் பிடியில் சிக்கியிருக்கலாம். சில சமயம் குறிப்பிட்ட சில செயலி களின் பயன்பாடுகள், அதிக டேட்டா பயன்பாடு இருந்தாலும்கூட மொபைல் ஸ்லோவாக இருக்கலாம்.

எஸ்எம்எஸ்: புதிய நம்பர்கள், அல்லது உங்களுக் குத் தெரியாத நம்பருக்கான அழைப்புகள் சென்றிருந் தால் உடனடியாக அது என்னவென்று ஆராய்ந்து பாருங்கள். மற்ற நம்பர்களுக்கு கால் செய்யும்போது அல்லது குறுஞ்செய்தி அனுப்புகையில் கவனமாக குறித்து வைத்துக் கொள்ளுங்கள். புதிய நம்பர் பதிவு பில்லில் இருந்தால் உங்கள் ஃபோனில் உளவுக் கருவிகள் இருக்கலாம். உங்களது தொலைபேசிக்கு சம்பந்தமே இல்லாத பல ஃபைல்கள் தாமாகவே தோன்றியிருக்கும். உங்களது அனுமதி இல்லாமலேயே போன் அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் உங்கள் தொலைபேசியில் இருந்து செல்லும். உங்களது மின்னஞ்சல்கள் நீங்கள் திறப்பதற்கு முன்னதாகவே திறக்கப்பட்டுப் படிக்கப்பட்டிருக்கும்.


பேட்டரி ஆயுள்: உங்களுக்குத் தேவையில்லாத செயலிகளைத் தரவிறக்கம் செய்யாதீர்கள். உங்கள் கைபேசியில் அவற்றின் மூலம் தகவல்கள் பதிவு செய்யப்பட்டு இயக்கத்தில் இருக்கும். பேட்டரி ஆயுள் காலப்போக்கில் தவிர்க்க முடியாமல் குறையும். உளவுக் கருவிகள் இருந்தாலும், அவைகள் ஸ்கேன் செய்வ தாலும் ஆட்டோமேடிக்காக ஸ்மார்ட்போன் வாழ்வு குறையும்.

உங்களுக்குத் தெரியாத மின்னஞ்சல் இணைக்கப் பட்டிருந்தால் போன் ஹேக் செய்யப்பட்டுள்ளது என்று அர்த்தம். உங்களது போனிலுள்ள காமிரா தானாகவே திறந்துவிடும். உங்கள் போன் முழுவதும் உங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லாமலேயே தானியங்கி தொடல்களைச் செய்யும். மொபைல் எப்போதும் சூடாகவே இருக்கும். மேலும் முக்கியமாக மொபைலில் பேட்டரி சீக்கிரமாகத் தீர்ந்துவிடும். மர்ம பாப் ஆப்கள் தாமாகவே திறக்கும்.

மேற்சொன்னவற்றில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்டவை இருந்தால் நிச்சயம் உங்கள் போன் ஹேக் செய்யப்பட்டு இருக்கலாம் எனத் தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுத்துவிடுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் ஸ்மார்ட் போனின் இணைய தொடர்பை துண்டித்தாலே உங்கள் ஸ்மார்ட்போனை யாராலும் நெருங்க முடியாது..

# ஸ்மார்ட்போன் ஹேக் செய்யப்பட்டுள்ளதை அறிந்து கொள்வது எப்படி?



# பேரறிஞர் அண்ணாவிடம் சொக்கிப்போன போப்பாண்டவர்!



அ.இரா.முல்லைக்கோ. பெங்களூரு

ஐந்து ஏக்கர் நிலப் பரப்பில் ரோம் பெரும் நகரான வாடிக்கன் என்ற தங்க நகரத்தில் உலக கிறித்தவ மதத்தலைவர் போப் பாண்டவர். தனி நாடு, தனி ஆதிக்க உரிமை கொண்டு ஆளுமை செய்து வருகின்றார். இது நாடறிந்த பழமை யான செய்தி!

ஆற்றல் பெருநிதி, தமிழகத்தின் விடிவெள்ளி, தமிழர் நாட்டின் எழுச்சிமிகு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழு குன்று நகரம் என்றழைக்கப்படுகின்ற ரோம் நகரத்திற்குச் சென்ற போது போப்பாண்டவரை சந்திக்க ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது.

உலகம் போற்றும் அண்ணல் காந்தி பிறந்த இந்திய ஒன்றியத்தின் கடைக்கோடி மாநிலம் தமிழ்நாட்டின் முதல்வர் நான் என்று பேச ஆரம்பித்து தமிழ், தமிழர் களின் சிறப்பை எடுத்துச் சொல்லி ஐந்து நிமிடத்தில் தன் ஆற்றல் பெருவெள்ளப் பெருநடை அழகுப் பேசை முடித்தார் அண்ணா.

போப்பாண்டவர் சொன்னார், “அருமையாகப் பேசு கிறீர்கள் தொடர்ந்து பேசுங்கள். உங்களுக்கு நேரக் கட்டுப்பாடு கிடையாது, பேசுங்கள்.“ என அன்புடன் விழைந்தார். தொடர்நது அண்ணா ஐம்பத்தைந்து நிமிடங்கள் பேசினார்.

அண்ணாவின் அருவி பெரும் சாரலில் சிக்குண்ட போப்பாண்டவர் அண்ணாவின் பேச்சில் தேனுண்ட வண்டாய் சொக்கிப் போனவர் அண்ணாவிற்கு நன்றி தெரிவித்து உங்களுக்கு என்ன பரிசு வேண்டும் கேளுங்கள் என்றார்.

“என்ன கேட்டாலும் தருவீர்களா?” என்று கேட்டார் அண்ணா. “கேளுங்கள் தருகிறேன்.“ என்றார் போப்பாண்டவர்.

போப்பாண்டவரை யார் சந்தித்தாலும் குறிப்பிட்ட நேரத்துக்குள் பேச்சை முடித்துக் கொண்டு, போப்பாண்டவரால் வந்தவருக்கு பரிசுகள் வழங்கி அனுப்பி வைப்பது வாடிக்கன் நகரின் மரபு.

புதுச்சேரி பிரஞ்சுக்காரர்களின் ஆதிக் கத்துக் குட்பட்டு இருந்தது போல, போர்ச்சுக்கல் நாட்டார் இந்தியாவின் கடற்கரை நகரான கோவாவை ஆக்கிரமித்திருந்தனர்.



*போர்ச்சுக்கலின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய மோகன் மைகேல் ரானடே, அன்றைக்கு போர்ச்சுகல் தலைநகரான லிஸ்பன் சிறையில் வதை பட்டு வாடுகின்றார். உலக கிறித்தவர்களின் தலைவ ரான நீங்கள் போர்ச்சுகல் ஆட்சியாளர்களிடம் பேசி, மோகன் மைக்கேல் ரானடேவை விடுதலை செய்ய வேண்டும். அதுவே நீங்கள் எனக்களிக்கும் பரிசாகும்" என்று கேட்டுக் கொண்டார் அண்ணா. சரி என்று சொன்னார் போப்பாண்டவர். மகிழ்ச்சியோடு இந்தியா திரும்பினார் அண்ணா.*

*போப்பாண்டவரின் வேண்டுகோளை ஏற்று விடுதலை செய்யப்பட்ட மோகன் மைக்கேல் ரானடே இந்தித் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டார். டெல்லி வந்த ரானடேவை வரவேற்க அன்றையப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் விமான நிலையத்திற்குச் சென்றார்.*

*மோகன் மைக்கேல் ரானடே பிரதமர் இந்திரா காந்தியிடம் யாருக்காகப் போராடினேனோ அந்த கோவா நாட்டு மக்களே என்னை மறந்து விட்ட நிலையில்... தமிழகத்தில் இருந்து என் விடுதலையை வேண்டிய திரு. அண்ணாதுரை அவர்கள் எங்கே என்று கேட்டார். "அண்ணா மறைந்து விட்டார்!" "அவர் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் நாஞ்சில் மனோகரனை அழைத்து வந்திருக்கிறேன்" என்று சொன்னார் இந்திரா.*

*மனம் உடைந்து போன கோவா விடுதலைப் போராளியான ரானடே, நான் முதலில் செல்ல வேண்டிய இடம் கோவா அல்ல. அண்ணாவை அடக்கம் செய்யப்பட்ட இடம்தான் என்றார்.*

*இந்திரா காந்தி, மோகன் மைக்கேல் ரானடே மற்று நாஞ்சில் மனோகரனை உடனடியாக சென்னைக்கு அனுப்பி வைத்தார்.*

*மாமனிதர், பேரறிஞர் அண்ணா எதையும் தாங்கும் இதயத்தோடு துயில் கொள்ளும் மெரினா கடற் கரையில் அழுது புரண்டு, மோகன் மைக்கேல் ரானடே தனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி னார் என்பது வரலாற்று பொன்னேட்டின் பதிவு!*

*போப்பாண்டவரிடம் தனக்கென எதுவும் கேட்காமல் ஒரு விடுதலைப் போராளியின் விடுதலை வேண்டி ஈரோட்டுப் பாசறையில் பூத்த மனிதநேய மாந்தர்தான் நமது போற்றுதலுக்குரிய "பேரறிஞர் அண்ணா" அவர்கள்.*

*தெரிந்து கொள்வோம்... இப்படிப்பட்ட வரலாறு கிடைக்கவே கிடைக்காது என்று உச்சபட்ச உன்னத மான நம்பிக்கையோடு மானத்தமிழர்கள் ஆகிய நாம், இம்மண்ணில் வாழ்கிறோம்.*

***"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"*** *என்ற வரை வரி முழக்கத்தோடு..*

## வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

(குடியரசு தலையங்கம் 17.01.1926)



அதாவது தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி விதிகளின் 8–வது பிரிவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்தல் என்கிற தலைப்பின்கீழ் "நான்கு முஸ்லிம்கள், ஒரு கிறிஸ்தவர், தீண்டாதார் என்று சொல்லப்படும் ஒருவர்'' ஆகிய இவர்களையும் இவர் களைத் தவிர மொத்தத்தில் அதிக வாக்கு பெற்ற 19 அங்கத்தினர்களையும் தேர்வு செய்ய வேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பெயரென்ன இது வகுப்புவாரி பிரதிநிதித்துவமா? அல்லவா?

இன்றைய தினமும், காஞ்சீபுரம் மகாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாதென்று வாதாடின தீண்டாத வகுப்பைச் சேர்ந்தவரென்று சொல்லும் ஸ்ரீமான் ஜயவேலுவும், முகமதியர் வகுப்பைச் சேர்ந்த வர்களான ஜனாப்கள் ஷாபி மகமது, ஹமீத்கான் இவர்களும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கை யின் மூலமாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஸ்தானம் வகித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். திருச்சியில் இரண்டு வருஷங்களுக்கு முன்கூடின மாகாண காங்கிரஸ் கமிட்டியில் ஸ்ரீமான் ஈ.வெ.இராம சாமி நாயக்கர் அக்ராசனராயிருக்கும் போது, ஜனாப்கள் ஷாபி மகமது, சென்னை அப்துல் ஹமீத் கான் முதலியவர்கள் தங்களுக்கு நான்கு ஸ்தானங்கள் போதாதென்றும், ஆறு ஸ்தானங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும் விண்ணப்பம் எழுதி மற்றும் பல மகமதியர்களிடமும் கையெழுத்து வாங்கிக் கொடுத்தி ருக்கிறார்கள்.

கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் குழந்தையும், தங்கள் வகுப்பாருக்குள்ள வகுப்புவாரி பிரதிநிதித்து வத்தின் பலனை அனுபவத்திருக்கிறார். அவருடைய பெயர் இன்றைய தினமும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ "வோட்டர் லிஸ்டில்'' இருந்துதான் வருகின்றது.

இவ்வளவு பலம் பெற்று அமலில் இருக்கும் ஒரு அபிப்பிராயத்தை பொது ஜனங்களின் விருப்பத்தைத் தங்களுடைய பணப் பெருக்கத்தாலும் மித்திர பேதத்தாலும் அமுத்திவிடலாமென்று நினைப்பது எவ்வளவு யோக்கியப் பொறுப்பற்ற காரியமென்பதைப் பொதுஜனங்களே யோசிக்க வேண்டியது.

# மதுரையில் 15 - ம் நூற்றாண்டைச் சேர்ந்த குதிரைவீரன் நடுகல் கண்டுபிடிப்பு!

மதுரை மாவட்டம், துணைக்கோள் நகரம் அருகிலுள்ள உச்சப்பட்டியில் கி.பி.15ம் நூற்றாண்டைச் சேர்ந்த குதிரைவீரன் நடுகல், விஜயநகர அரசின் சின்னம் ஆகியவற்றை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு, மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர்கள் முனைவர் து.முனீஸ்வரன், முனைவர் மு.லட்சுமணமூர்த்தி, உச்சப் பட்டியைச் சேர்ந்த வி.சூரியபிரகாஷ் ஆகியோர் துணைக்கோள் நகரம் அருகிலுள்ள உச்சப்பட்டியில் மேற்கொண்ட கள ஆய்வின் போது குதிரைவீரன் நடுகல், விஜயநகர அரசு சின்னம் ஆகியவற்றைக் கண்டு பிடித்தனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு, உதவிப் பேராசிரியர் து.முனீஸ்வரன் ஆகியோர் கூறியதாவது,

2 அடி உயரமும் 1லு அடி அகலமும் கொண்ட ஒரு பலகைக் கல்லில், ஒரு வீரன் குதிரை மேல் அமர்ந் திருப்பது போன்று புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட் டுள்ளது.


வலது கையில் ஈட்டி ஏந்தியும், இடது கையில் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தபடியும் அவன் காட்சி தருகிறான். கைகளின் மேல் பகுதியில் காப்பும், கழுத்தில் சிறிய மாலையும், தொடைவரை ஆடையும் அணிந்துள்ளான். தலையில் சிறிய கொண்டை உள்ளது. சிற்பம் வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இது போரில் பங்கேற்று வீரமரணமடைந்த குதிரைப்படை வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாக இருக்கலாம். குதிரையில் அமர்ந்திருப்பதால் இவரை ஊர்மக்கள் ஐயனாராக வழிபடுகிறார்கள்.

அதன் அருகில் கிழக்கு நோக்கியவாறு ஒரே கல்லில், ஒரே அளவில் செதுக்கப்பட்ட சப்தகன்னி யரின் புடைப்புச்சிற்பம் உள்ளது. குதிரை வீரன், சப்த கன்னியர் சிற்பங்களை மேடை அமைத்து வணங்கு கிறார்கள். இதன் கீழ்ப்பகுதியில் தெற்கு நோக்கியுள்ள ஒரு பலகைக் கல்லில் லிங்கம், சூரியன், சந்திரன், சூலம் ஆகியவை கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.

குதிரை வீரன் சிற்பம் இருக்குமிடத்திலிருந்து 200 மீட்டர் தூரத்தில் பாறை மேல் 10 அடி உயரமுள்ள கல்லால் ஆன பீடத்துடன் கூடிய ஒரு தீபத்தூண் உள்ளது. இதை பெருமாள் கோயில் என்கிறார்கள். சதுரமாக உள்ள இதன் கீழ்ப்பகுதியில் கை கூப்பிய இருவரும், சூரிய சந்திர சின்னங்களும் உள்ளன. அதன் மேல்ப்பகுதி உருளையாக உள்ளது. பீடத்தில் கி.பி.18ம் நூற்றாண்டைச் சேர்ந்த சேதமடைந்த ஒரு கல்வெட்டு உள்ளது.

இதன் மூலம் ஹேவிளம்பி வருஷம் கார்த்திகை மாதம் உச்சிப்பட்டியிலுள்ள இக்கோயிலில் நேர்த்திக் கடனாக பீடம் அமைத்துக் கொடுத்திருப்பதை அறிய முடிகிறது. இத்தூணில் இதற்கு முன் இருந்து உடைந்து போன பழைய கற்கள் கீழே அடுக்கி வைக்கப்பட் டுள்ளன. அவற்றில் ஒன்றில் விஜயநகர அரசின் சின்ன மான வராகமும், மற்றொன்றில் வணங்கிய நிலையில் ஒருவரும், சங்கும் கோட்டுருவமாக வரையப்பட்டுள் ளன.

மதுரையில் விஜயநகர மன்னர்கள் ஆட்சி உருவான பின்பு, ஆந்திராவிலிருந்து வந்த மக்களின் குடியிருப்பு இவ்வூரில் உருவாகியிருக்கிறது. குதிரைவீரன் நடுகல், விஜயநகர அரசு சின்னமான வராகம் ஆகியவற்றின் அமைப்பைக் கொண்டு, இவற்றை கி.பி.15ம் நூற்றாண் டைச் சேர்ந்தாகக் கருதலாம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள். ●



# அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதல் பெண் துணை குடியரசுத்தலைவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த

# கமலா ஹாரிஸ்

அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதல் பெண் துணை குடியரசுத்தலைவர், முதல் கருப்பு துணை குடியரசுத் தலைவர், முதல் இந்திய வம்சாவழி துணை குடியரசுத் தலைவர் என்ற வரலாற்றை சிறப்பாக எழுதி இருக்கிறார் கமலா ஹாரிஸ்.

தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டம், மன்னார் குடிப் பகுதியில் உள்ள துளசேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த இந்தப் பெண்ணின் முதல் கனவு, அமெரிக்க நாட்டின் குடியரசுத்தலைவர் ஆவதுதான். அதற்கான அடியை அவர் எடுத்து வைத்தார். கொஞ்ச காலம் பிரச்சாரமும் செய்தார். ஆனால் தனது பிரச்சாரத்தைத் தொடர போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் அதை கை விட்டார்.


முதலில் சான்பிரான்சிஸ்கோ மாவட்ட அரசு வழக்கறிஞர் பதவி வகித்தபோது, அந்தப் பதவியில் அமர்ந்த முதல் பெண் இவர்தான். முதல் இந்திய வம்சாவழிப் பெண்ணும் இவர்தான். கலிபோர்னியா மாகாணத்தில் இருந்து அதிகாரமிக்க அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையின் உறுப்பினராக தேர்ந் தெடுக்கப்பட்டு, அந்த அவையின் முதல் இந்திய வம்சா வழி பெண் உறுப்பினர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

இப்போது அவர் அமெரிக்க நாட்டின் முதல் பெண் துணை குடியரசுத்தலைவர், முதல் இந்திய வம்சாவழி பெண் துணை குடியரசுத்தலைவர், முதல் கருப்பின பெண் துணை குடியரசுத்தலைவர், முதல் ஆசிய பெண் துணை குடியரசுத் தலைவர்.

டொனால்ட் டிரம்பை தோற்கடிப்பதற்கான தனது உறுதியான முயற்சியில் கருப்பின வாக்காளர்கள் ஆற்ற வேண்டிய முக்கியப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக கமலா ஹாரிசை தனது துணை குடியரசுத் தலைவர் வேட்பாளர் ஆக்கினார் ஜோ பைடன். ஒபாமா பதவி வகித்த காலத்தில் எல்லோரும் அவரை பெண் ஒபாமா என்று செல்லமாக அழைத்து மகிழ்ந் திருக்கிறார்கள். அதற்கு அடித்தளமிட்டவர், குவென் இபில் என்ற பத்திரிகையாளர்தான். அவர்தான் முதலில் கமலா ஹாரிசை ‘பெண் ஒபாமா’ என்று அழைத்தவர்.

ஒபாமாவுக்கு கமலா ஹாரிஸ் மிகவும் நெருக்கமாக இருந்திருக்கிறார். செனட் தேர்தல் உள்ளிட்ட பல தேர்தல்களில் கமலா ஹாரிசை முன் மொழிந்தவர் ஒபாமாதான்.





கமலா ஹாரிசின் அப்பா டொனால்டு ஹாரிஸ். ஜமைக்காவைச் சேர்ந்தவர். அம்மா, சியாமளா கோபாலன் புற்றுநோய் ஆராய்ச்சியாளராகவும் மனித உரிமைப் போராளியாகவும் விளங்கியவர். கருத்து வேற்றுமையால் டொனால்டு ஹாரிசும், சியாமளா கோபாலனும் விவாகரத்து செய்து கொண்டனர். தன் செல்ல மகள்களான கமலா ஹாரிசையும் மாயாவையும் வளர்க்கும் பொறுப்பை சியாமளா கோபாலன் சுமந்தார்.

தனது சுய வரலாற்றில் இதை கமலா ஹாரிஸ் குறிப்பிடத் தவறவில்லை. “என் அம்மா இரண்டு கருப்பு மகள்களை வளர்க்கிறார் என்பதை நன்றாக உணர்ந் திருந்தார். தான் தத்தெடுத்த தாயகமான அமெரிக்கா, மாயாவையும் என்னையும் கருப்பின பெண்களாகத் தான் பார்க்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். நாங்கள் நம்பிக்கையுள்ள, பெருமைக் குரிய கருப்பின பெண்களாக வளர்வோம் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்” என அதில் கமலா ஹாரிஸ் குறிப்பிட்டுள் ளார்.

கமலா ஹாரிஸ், அமெரிக்காவின் ஒக்லாந்தில் பிறந்தார். பெர்க்லியில் வளர்ந்தார். அவர் தனது பள்ளிப்படிப்பை பிரெஞ்சு மொழி பேசும் கனடாவில் கழித்தார். அவரது அம்மா, சியாமளா கோபாலன் அப்போது மாண்ட்ரீலில் மெக்கில் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தார். அவர் தனது மகள் கமலா ஹாரிசிடம் அடிக்கடி சொல்கிற வார்த்தைகள் உண்டு. அந்த வார்த்தைகள், “சும்மா உட்கார்ந்து கொண்டு எதைப்பற்றியாவது புகார் செய்து கொண்டிருக்காதே. எதையாவது செய்’’ என்பதுதான்.

கமலா ஹாரிஸ், ஹோவர்ட் பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் படித்தார். அதன் பின்னர் கலிபோர்னியா பல்கலைக் கழகம் சென்று சட்டம் படித்தார். அதைத் தொடர்ந்து அலமேடா கவுண்டி யில் மாவட்ட வழக்கறிஞர் அலுவலகத்தில் தன் பணியைத் தொடங்கினார்.

சான்பிரான்சிஸ்கோவில் 2003ஆம் ஆண்டு, முன்னணி அரசு வழக்கறிஞர் ஆனார். 2010ஆம் ஆண்டு, அவர் கல்போ ரினியா மாகாண அட்டார்னி ஜெனரலாக உயர்ந்தார். இரண்டு முறை அவர் அந்தப் பதவியை வகித்தார். அந்த காலகட்டத்தில் அவர் ஜனநாயக கட்சியில் புகழ்பெற்ற நட்சத்திரமாக ஜொலிக்கத் தொடங்கினார். 2017ஆம் ஆண்டு அவர் கல்போரினியா மாகாணத்தில் இருந்து அமெரிக்க நாடா ளுமன்ற செனட் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

கமலா ஹாரிசின் கணவர் டக்ளஸ் எம்ஹாப், வழக்கறிஞரான அவரை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்புதான் திருமணம் செய்து கொண்டார். எலா மற்றும் கோல் என்னும் இரண்டு குழந்தைகளுக்கு கமலா ஹாரிஸ் சித்தியாகவும் இருக்கிறார்.

கமலா ஹாரிசுடன் இணைந்து பணியாற்றப் போவதில் நான் மிகவும் பெருமைப்படுவதாக ஜோ பைடன் கூறி இருக்கிறார். இந்த கமலா ஹாரிஸ், 2024ஆம் ஆண்டு நடக்க உள்ள அமெரிக்க குடியரசுத் தலைவைர் தேர்தலில், அந்த நாட்டின் முதல் பெண் குடியரசுத்தலைவர், முதல் இந்திய வம்சாவழி பெண் குடியரசுத்தலைவர் என்ற இலக்கையும் அடையும் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கிறது. அதற்கான முயற்சி, அர்ப்பணிப்பு, உழைப்பு அவரிடம் இருக்கிறது. எனவே அவர் அமெரிக்காவின் புதிய வரலாறைப் படைப்பார் என்று நம்பலாம்..



கொரோனாவானாலும்
கூட்டம் குறையவில்லை
மாநகரப் பேருந்தில்!

ஒவ்வொரு வழித்தடத்திலும்
முண்டியடித்து
ஏறினார்கள் மக்கள்!

இருக்கைகள் நிறைந்து
நின்றவர்கள் இருபது பேர்!
அதில் ஒரு பெண்
நிறைமாதக் கர்ப்பிணி!

கர்ப்பிணிக்கு
இரக்கம் காட்டி
இருக்கை தர
எவரும்
முன் வரவில்லை!
ஐம்பது வயதுடைய
ஒருவர் மட்டும்
எழுந்து நின்று
தன் இருக்கையில்
அமரச் சொன்னார்
கர்ப்பிணிப் பெண்ணை!
இடம் தந்தவருக்கு
கண்களால் நன்றி கூறி
அமர்ந்தாள் அவள்!

பத்து நிமிடப்
பயணத்திற்குப்பின்
இருக்கை தந்தவர்
இறங்குமிடம் வந்தது!

மிக மிக மெதுவாக
படிகளில் இறங்க முயற்சித்தவர்
சற்றுத் தடுமாறி
கீழே விழுந்ததில்
அவரது
ஒரு கட்டைக்கால்
கழன்று விழுந்தது.

ஓடோடி வந்த
ஓட்டுனர்
உறுவி விழுந்த
கட்டைக்காலை
எடுத்துக் கொடுக்க
பெற்றுக் கொண்ட
பயணி...
தன் காலோடு
பொருத்திக் கொண்டு
எழுந்து நின்று
ஓட்டுருக்கு
நன்றி கூறி
தாங்கித் தாங்கி
புறப்பட்டார்!

இடம்தர மனமின்றி
இருக்கையில்
இருந்தவர்கள்
மாற்றுத் திறனாளியின்
இரக்கக் குணம் கண்டு
வெட்கத்தால்
தலை கவிழ்ந்தார்கள்!

- **பூவைதயா**

# பயணிகள் கவனிக்க...



Regd. No. 4/2019

Support Forever

# JALADHI FOUNDATION

63, Krishna Nilayam, Chennai bypass Road, Tiruttani - 631 209.
Cell : 9894665515 e-mail: info@jaladhifoundation.org.in



**HISTORY**

Jaladhi Foundation started its journey from 09.01.2019. The founder's Imagination, and foreseeable Expression created a pathway for performance of various social welfare activities and also to provide shelter for upliftment of various needful sections of the society .The foundation and its long lasting effort created a special focus protecting the social wellbeing of people by conducting various awareness programs and financial contributions, focused on eradicating the various barriers that restrain their development.

**VISION AND MISSION**:

To Impart a wide spread awareness on various Multi-disciplinary fields and also to conduct various social welfare programs and events to accelerate the growth of needful community .Our foundation has given special

attention for the women community and also strived boosting and bringing out their inner talents and skills.

**VALUE STATEMENT:**

Promoting quality of life of various needful community by conducting awareness programs through equal participation.

**OBJECTIVES**:

- To Promote the growth of various need ful community by eradicating social barriers
- To Conduct services and various out reach programs to boost the awareness regarding the existence of problem
- To Enhance the social security of vario us needful community.

**SERVICES**:

Our Foundation has conducted various social events to create widespread awareness regarding existence of problems and also aimed at eradicating various social hurdles faced by them. From 09/01/2019 to 09/01/2020, Our foundation has successfully conducted 31 projects in different fields. The details are listed below.

**SERVICES PROVIDED**:

- Education(Girl child and women)
- Health care
- Environment
- Livelihood
- Disaster relief
- Animal welfare
- Rural development
- Sports( For women)
- Poverty and Hunger
- Holistic
- Drug Eradication(Mind depression)
- Gender inequality
- Vocational Training for women
- Entrepreneurship development program for women
- Mental health for women
- Target Intervention

**PROJECT'S 2019 TO 2020: (09.01.2019 - 31.12.2019)**

**EVENT'S CONDUCTED DATES**

Distribution of Saree and Blouse to 30 women and 15 leprosy affected men in RAAS old age home at Tiruttani
9th January 2019

National Voter's Day Awareness Rally at Tiruttani, Dr.Radhakrishnan Boys Higher Secondary School, Tiruttani.
25th January 2019

Speech Competition and Stage Programs were conducted on Government Girls Higher Secondary School to create awareness on Adult franchise
25th January 2019

Awareness Program on Health and Nutrition Education for Women, GRT Institute of Engineering and Technology, Tiruttani
20th February 2019

Awareness on Stress Management, Suicide Prevention and Mental Health at Government High School, Chivvada,

Thiruvalangadu Block, Tiruttani Taluk, Tiruvallur District
5th March 2019

Awareness on Stress Management, Suicide Prevention and Mental Health at Government Girls Higher Secondary School, Tiruttani, Tiruvallur District
7th March 2019

Awareness on Stress Management, Suicide Prevention and Mental Health at Government Higher Secondary School, ArcotKuppam, Thiruvalangadu Block, Tiruttani Taluk, Tiruvallur District
11th march 2019

Medical Camp for Homeopathy, NIEPVD in Poonamalle
22nd March 2019

Awareness on Stress Management, Suicide Prevention and Mental Health at Government Higher Secondary School, KanakammaChathram, Thiruvalangadu Block, Tiruttani Taluk, Tiruvallur District
28th March 2019

Awareness on Stress Management, Suicide Prevention and Mental Health at Government High School, Thomur, Thiruvalangadu Block, Tiruttani Taluk, Tiruvallur District
29th March 2019

National Yoga Day, Government Girls Higher Secondary School, Tiruttani
20th June 2019.

The First Hospital Day was Celebrated in Government Hospital, Tiruttani
30th July 2019

Celebration of Rabindranath Tagore Memorial Day
7th August 2019

Inter College Women's Volley Ball Tournament in Chennai
27th August 2019

Teacher's Day Celebration, Dr.Radhakrishnan Boys Higher Secondary School, Tiruttani.
5th September 2019

Awareness Program on World Mental Health Day
10th October 2019

International Girl's Child Day
11th October 2019

Awareness program for Suicide Prevention & Drugs Eradication, Lady Willington Higher Secondary School, Triplicane.
14th November 2019

Awareness on Girl's Safety
14th November 2019

Awareness on Anamya Prevention for Birth Disability
14th November 2019

Awareness for Menstrual Hygiene & related issues
14th November 2019

Awareness on Food & Nutrition Education
14th November 2019

Awareness on Folic Acid
14th November 2019

Awareness on Health & Nutrition
14th November 2019

Distribution of 50 Tubelight set to Government Hospital, Tiruttani
26$^{th}$ November 2019

World Disability Day, an Awareness on Preventing Birth Disability, SDNB Vaishnav College, Chromepet
12$^{th}$ December 2019

Awareness of Adolescent Girl's Health Care
12$^{th}$ December 2019

Awareness on Uterus Cancer
12$^{th}$ December 2019

Awareness on Breast Cancer
12$^{th}$ December 2019

Awareness on Nutrition & Diets
12$^{th}$ December 2019

Awareness on SOS(Save our Soul) App
12$^{th}$ December 2019

**CONTRIBUTION TOWARDS COVID- 19 RELIEF**:

Jaladhi Foundation has made the following contributions:

ï% Distribution of Bed Spreads to Government Hospital, Tiruttani on 14$^{th}$ April 2020.

ï% Contribution of rice and 21 types of groceries to 5 visually challenged people on 16$^{th}$ April 2020

Jaladhi Foundation also planned to distribute rice to people living in Thiruvalangadu Block, Tiruttani Taluk, Tiruvallur District and also

a) provided five kg of rice to each family Members on 21$^{st}$ April 2020.

b) 30 set of Groceries were provided to the Tribal people on 22$^{nd}$ April 2020.

We also Celebrated our Chairman's Birthday Dr JaladhiUmaSankar by provided food (mid-day meals) to more than 150 Municipality workers in Tiruttani Municipality Office on 1$^{st}$ June 2020.

Celebrates the 139$^{th}$ birthday of Helen Keller by conducting **Awareness on Helen Keller Life History** on 27$^{th}$ June 2020.

Jaladhi Foundation celebrated its 74th **Independence Day** on 15$^{th}$ August 2020 by**Plantation of 74 saplings to enrich our Environment** at Panapakkam Panchayat, , TiruvallurDistrict.

Thus the Jalathi Foundation has played a pivotal role in contributing to the society, exclusively for the upliftment of the weaker and needed section of the society. The immense support of Jalathi Foundation made it to reach a higher peck and aided it to contribute more to the public and society for various social causes and measures with a determination and vision to reduce various barriers that retrain the development of women community and strives to provide them a barrier free environment and a social recognition.

# தமிழக எம்.பி.க்களுக்கு இந்தியில் பதிலளிப்பது சட்ட விதிமீறல் மத்திய உள்துறை இணை அமைச்சருக்கு

## சு.வெங்கடேசன் கடிதம்

இந்தி பேசாத மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவல் மொழியான ஆங்கிலத்தில் பதில் அளிக்க வேண்டும் என்கிற அரசாணையை உங்கள் அலுவலக ஊழியர்கள் மீறி இந்தியில் பதில் அளித்துள்ளனர். அது அரசாணையையும் மீறுவது ஆகும். சரிசெய்ய வேண்டும் என மார்க்சிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன் மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய்க்கு வேண்டுகோள் வைத்துள்ளார். இதுகுறித்து இன்று அவர் எழுதியுள்ள கடிதம்:

"உங்களின் நவ.9ஆம் தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். அக்கடிதம் இந்தி மொழியில் இருந்ததால் அதன் உள்ளடக்கம் குறித்து என்னால் அறிய இயல வில்லை. இந்தி மொழியில் பதில் தந்ததன் மூலம், சட்டம் மற்றும் நடைமுறைகள் அப்பட்டமாக மீறப் பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை அளிப்பதாக உள்ளது.


நான் தங்களுக்கு நவ.9 அன்று சிஆர்பிஎஃப் துணை மருத்துவப் பணி நியமனங்களுக்கான தேர்வு மையங் களை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அமைக்க வேண்டுமென்று கோரி கடிதம் எழுதியிருந்தேன். தற்போது வந்துள்ள பதில் அக்கோரிக்கை குறித்ததா கவே இருக்கக் கூடுமென்று அனுமானிக்கிறேன்.

1963ல் தமிழகம் உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களில் அலுவல் மொழியாக இந்தி திணிக்கப் படாது என அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு உறுதியளித்தது தாங்கள் அறிந்ததே. இப்பிரச்சினை மீது எழுந்த நாடு தழுவிய விவாதத்தில் பிறந்த கருத்தொற்றுமையின் விளைபொருளே நேரு உறுதி மொழி.



பின்னர் 1965ல் தமிழகத்தில் நடந்தேறிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் பின்புலத்தில் அன்றைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியாலும் இதே உறுதிமொழி திரும்பவும் வழங்கப்பட்டது.

1967ல் அலுவல் மொழிச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் மூலம் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியால் இது உறுதி செய்யப்பட்டது.



நான் இங்கு 1976 அலுவல் மொழி விதிகள் (இந்திய ஒன்றியத்தின் அலுவல் தேவைகளின் பயன்பாட்டிற்காக) (1987, 2007, 2011 ஆண்டுகளில் திருத்தப்பட்டது) ஆவணத்தில் இருந்து சில பகுதிகளைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். "இந்த விதிகள், அலுவல் மொழிகள் (ஒன்றியத்தின் அலுவல் பயன்பாட்டிற் குரியது) விதிகள் 1976 என்று அழைக்கப்படும். இவை இந்தியா முழுமைக்கும், தமிழ்நாடு மாநிலம் தவிர, பொருந்தும்".

இச்சட்ட விதிகள் மிகத் தெளிவாக தமிழ்நாடு மாநிலத்துக்கு ஒன்றிய அலுவல் மொழிச் சட்டத்தில் இருந்து விலக்கு பெற்றுள்ளதைக் குறிப்பிடுகிறது. மொழிப் பிரச்சினையில் தனது நிலையை அழுத்தமாக நிலை நிறுத்துவதில் தனித்துவமான இடம் தமிழ்நாட்டிற்கு இருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். மேற்கூறிய விதிவிலக்கு எங்கள் மாநிலத்திற்குத் தரப்பட்டதும் அதன் வெளிப்பாடேயாகும்.

மேலும் அதே விதிகள், "சி" பிரிவில் குழுவாக்கப் பட்டுள்ள மாநிலங்களில் அலுவல் மொழிச் சட்டம் அமலாக்கப்படுவது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அதன் பொருத்தமான பகுதியைக் கீழே தந்துள்ளேன. "சி" பிரிவில் இடம் பெற்றுள்ள பகுதியில் உள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான மற்றும் அம்மாநிலங்களைச் சேர்ந்த, அலுவலகங்கள் (மத்திய அரசு அலுவலகங்கள் அல்லாதவை), தனி நபர்களுக் கான மத்திய அரசு அலுவலகங்களின் கடிதப் பரிமாற்றங்கள் ஆங்கிலத்திலேயே அமைய வேண்டும்."

எனவே, இந்தியில் பதில் தருவதான உங்கள் அமைச்சரவையின் நடவடிக்கை இச்சட்ட விதிகளை அப்பட்டமாக மீறுவது ஆகும். நான் உங்கள் கவனத் திற்கு மத்திய அரசு பணியாளர், பொதுமக்கள் முறை யீடுகள் மற்றும் ஓய்வூதிய அமைச்சகத்தின் அலுவல் நிர்வாகப் பிரிவு (DOPT அலுவலக சேவைப் பிரிவு) வெளியிட்ட "அரசு நிர்வாகத்திற்கும் நாடாளு மன்ற உறுப்பினர்கள்/ சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு மான அலுவல் தொடர்புகள் முறையான நடை முறை களைக் கடைப்பிடித்தல்" என்ற தலைப்பிலான எஃப்/ எண் 11013/4/2018 அலுவலக சேவை/ ஏ /மிமிமி / பிப்.10 தேதியிட்டது அரசாணை யைக் கொண்டு வர விழைகிறேன்.

இந்த அரசாணையின் இரண்டாவது பத்தி இதே பொருள் குறித்து இதற்கு முன்பாக அக்டோபர் 2012, நவம்பர் 2014, பிப்ரவரி 2018, அக்டோபர் 2018ல் பல்வேறு தேதிகளில் வெளியிடப்பட்ட அரசாணை களைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது பத்தி, மேற்கூறிய அரசாணைகள் கடைப்பிடிக்கப்படாமை குறித்து அத்துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட மீறல்கள் பற்றிப் பேசுகிறது. எதிர்காலத்தில் முறையான அமலாக்கத்தை உறுதி செய்ய மூல அரசாணையையும் அது இணைப்பாகத் தந்துள்ளது.

அந்த டிச.01/ 2011 தேதியிட்ட மூல அரசாணை எண் 11013/4/2011 அலுவல் சேவை (ஏ) பிரிவு 5 (எக்ஸ்)ன் வரிகள் இவை. "எப்பொதெல்லாம் நாடாளு மன்ற உறுப்பினரிடம் இருந்து ஆங்கிலத்தில் கடிதம் வரப் பெற்று அதற்கான பதிலை அலுவல் மொழிச் சட்டம் 1963 ன் அடிப்படையில், அதன் விதிகளின்படி, இந்தியில் தர வேண்டியிருந்தால், இந்தி பேசாத மாநி லங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், அதன் ஆங்கில மொழியாக்க வடிவமும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்".

அலுவல் மொழிச் சட்டத்தில் குறிப்பான விதிவிலக்கைப் பெற்றுள்ள தமிழகத்திற்கு இதன் இந்தி மொழிப் பயன்பாடு குறித்த அம்சம் பொருந்தா விட்டாலும் இந்தி பேசாத மாநிலங்கள் அனைத்திற் குமே நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து ஆங்கிலக் கடிதம் வரப்பெறும் பட்சத்தில் ஆங்கில மொழியாக்க வடிவம் அனுப்பப்பட வேண்டுமென்ற கட்டாயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே உங்கள் அமைச்சகம் ஆங்கில மொழி யாக்கம் இல்லாமல் இந்தி பேசாத மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியில் பதில் அளிப்பது இந்த அண்மைய அரசாணையையும் மீறுவது ஆகும். இந்த அரசாணையே தொடர் மீறல்களைச் சரிசெய்ய வெளியிடப்பட்டதே எனும்போது அதுவும் மீறப்படுகிறது.

முந்தைய பிரதமர்களால் வழங்கப்பட்ட உயர்வான உறுதிமொழிகள் இன்றைய ஆட்சியாளர்களாலும் மதிக்கப்பட வேண்டுமென்பது எனது ஆழமான உணர்வு. இருப்பினும் அரசாங்கமே சட்டங்களையும் நடைமுறைகளையும் திரும்பத் திரும்ப மீறுவது மனதை வருத்துவதாகும். ஆகவே, தமிழ்நாட்டிற்கு மொழிப் பிரச்சினையில் தரப்பட்ட தனித்துவமான உறுதி மொழியை மதித்து அதன் சட்ட ரீதியான அம்சங்களை அமலாக்குமாறு வேண்டுகிறேன்.

இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" என்கிற பன்மைத்துவப் பண்பைப் பாதுகாக்கிற மேன்மையான வரலாற்றுப் பெருமிதம் உள்ள நாடாகும். அத்தகைய பார்வை அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்விலும் வெளிப் பட வேண்டும். இதுவே நாட்டின் ஒற்றுமையை, கூட்டாட்சி முறைமையை வலுப்படுத்துவதாய் அமை யும்.

ஆகவே உங்கள் அமைச்சக அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களைத் தந்து தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்தும் வந்தது போன்றே, ஆங்கிலத்திலேயே பதில் தருவதை உறுதி செய்யுமாறு வேண்டுகிறேன்".

**நன்றி : தமிழ் இந்து**

# வெளிநாட்டு கொரோனா தடுப்பூசிகள் இந்தியா வருமா?

பொதுநல மருத்துவர் **கு.கணேசன்**

உலக அளவில் கரோனாவை எதிர்கொள்வதற்கான தடுப்பூசியைக் கொண்டுவருவதில் வளர்ந்த நாடுகள் போட்டி போடுகின்றன. தற்சமயம் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட 'கோவேக்சின்', 'ஜைகோவ்டி' இரண்டு தடுப்பூசிகளைச் சேர்த்து 11 'சோதனைத் தடுப்பூசிகள்' 3ம் கட்ட ஆய்வில் உள்ளன. இந்தியத் தடுப்பூசிகளுக்கு 50% பலன் கிடைத்தாலே போதும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க கரோனா தடுப்பூசி 90% பலன் தருவதாக பைசர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதைத் தொடர்ந்து ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்வி' தடுப்பூசி 92% பலன் தருவதாக அந்த நாடு அறிவித்தது. இந்த வாரம், அமெரிக்காவின் மாடர்னா நிறுவனம் தயாரித்துள்ள 'எம்ஆர்என்ஏ1273' (னீஸிழிகி1273) தடுப்பூசி 94.5% செயல்திறன் கொண்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சூழலில், அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் ரந்தீப் குலேரியா, 'வெளிநாட்டு கரோனா தடுப்பூசிகள் இந்தியத் தடுப்பூசிகளைவிடத் தரம் கூடியதென்றால் எந்தத் தடுப்பூசியை எவருக்கு முன்னிலைப்படுத்துவது?' எனும் முக்கியமான கேள்வியை எழுப்பியுள்ளார். அதேநேரம், கரோனாவுக்கான தடுப்பூசிகளை வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்வதிலும் சிரமங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

மருந்து வணிகம் தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ள அறிவுசார் காப்புரிமை ஒப்பந்தத்தின்படி ஒரு புதிய தடுப்பூசியைச் சந்தைப் படுத்தும் உரிமை அதைக் கண்டுபிடித்த மருந்து நிறுவனத்துக்கு 20 வருடங்களுக்குச் சொந்தமாகிறது. இக்காலகட்டத்தில், அந்த நிறுவனத்தின் அனுமதி, ஒப்பந்தம் எதுவுமில்லாமல் அந்தத் தடுப்பூசியைத் தயாரிக்கவோ சந்தைப்படுத்தவோ எவருக்கும் உரிமையில்லை.

போதுமான சோதனைகளை நடத்தி, திறன் மிகுந்ததும் தரமானதும் பாதுகாப்பானதுமான தடுப்பூசியைத் தயாரிப்பதற்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுகிறது. கரோனாவுக்கான தடுப்பூசியைக் கொண்டுவருவதில் கடந்த 10 மாதங்களாகக் கடுமையான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்த மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பெரும் லாபத்தை எதிர்நோக்குவதும் வழக்கம்தான்.



▲ கு. கணேசன்

**விலக்கு வேண்டும்**

கரோனா தடுப்பூசி வணிகத்தில் லாபம் ஈட்டுவது முக்கிய நோக்கமென்றால், இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் வெளிநாட்டுத் தடுப்பூசிகளை வாங்க முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே, கரோனா தடுப்பூசி நிறுவனங்கள் வணிக நலனைப் பின்னுக்குத் தள்ளி, மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை கொடுக்க முன்வர வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. இதற்காக, 'கரோனா தடுப்பூசியைச் சந்தைப்படுத்தும் போது அறிவுசார் காப்புரிமையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்' என்று இந்தியா, தென்னாப்பிரிக்காவுடன் இணைந்து உலக வர்த்தக அமைப்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. உலக நாடுகள் கொண்டுவரும் கரோனா தடுப்பூசியை அந்தந்த நாடுகளில் தயாரித்து வணிகப்படுத்தும் உரிமையை வழங்கினால் அல்லது சலுகை விலையில் வழங்கினால், பொருளாதார இழப்புள்ள நாடுகளுக்கு அது பயன்படும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு.

இதற்கு வழி தேடும் முயற்சிதான் காப்புரிமையில் இந்தியா விலக்கு கேட்பது. அறிவுசார் காப்புரிமை ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டபோதே சில விதிவிலக்குகளும் அதில் இணைக்கப்பட்டன. முக்கியமாக, மக்களுக்குப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் மருத்துவச் சூழல் ஏற்படும்போது, அதை எதிர்கொள்ள, காப்புரிமை விதிகள் தளர்த்தப்படலாம் என்கிறது ஒரு விதி. அதைப் பயன்படுத்தி, காப்புரிமை பெறும் மருந்து நிறுவனத்துடன் பேசி, நியாயமான காப்புரிமைத் தொகையைச் செலுத்தி உலக சுகாதார நிறுவனம் உரிமம் பெறலாம். ஆனால், அதற்கு 'உலக வர்த்தகக் காப்புரிமைக் கழகம்' சம்மதிக்க வேண்டும். இதில் இந்தியா, அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இங்கிலாந்து, ஜப்பான், சுவிட்சர் லாந்து உள்ளிட்ட 193 உறுப்பு நாடுகள் உள்ளன.

இப்போது காப்புரிமை பெறுவதற்கு ஆய்வுகளை நடத்திக்கொண்டிருக்கும் தடுப்பூசி நிறுவனங்களைச் சார்ந்த பணக்கார நாடுகளின் ஆதிக்கம் இதில் அதிகம். ஆகவே, இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் உலக வர்த்தக அமைப்பிடம் வைத்திருக்கும் கோரிக்கை பலத்த எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது. கடந்த அக்டோபர் 15ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் கோரிக்கையின் மீது எந்தவொரு முடிவும் எட்டப்படாமல் முடிந்திருக்கிறது. எனவே, வெளிநாட்டுத் தடுப்பூசிகள் தரம் மிகுந்ததாக அறிவிக்கப்பட்டால், இந்தியாவுக்கு அவை கிடைப்பது வர்த்தகக் காப்புரிமைக் கழகத்தின் கையில்தான் உள்ளது.

**தடுப்பூசி தேசியம்**

குழந்தை பிறப்பதற்கு முன்பே பெயர் வைப்பது போல், கரோனா தடுப்பூசி இன்னமும் உறுதிப்படாத நிலையிலும் அதன் விநியோகத்தில் பல அந்நிய நாடுகள் கோடிக்கணக்கான பணத்தை இப்போதே முதலீடு செய்துள்ளன. குறிப்பாக, அமெரிக்கா 6 பெரிய நிறுவனங்களுடன் 80 கோடி அளவிலான தடுப்பூசிகள் விநியோகத்துக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இது ஒவ்வொரு அமெரிக்கக் குடிநபருக்கும் இரண்டு தவணைகளுக்கு மேல் பயன்படுத்தப்படுவதற்கு உரித்தானது. இங்கிலாந்தும் 34 கோடி அளவிலான தடுப்பூசியைப் பெறுவதற்குப் பல மருந்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இது அங்கு ஒவ்வொரு தனி நபருக்கும் 5 தவணைகள் போடுவதற்குச் சமம். சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மெக்ஸிகோவும் இதுபோன்ற ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டன. இதன்படி, இந்த மருந்து நிறுவனங்கள் கரோனா தடுப்பூசியை உருவாக்குவதில் வெற்றி அடைந்தால், வேறு நாடுகளுக்கு அதை வழங்குவதற்கு முன்பு ஒப்புக்கொண்ட நாடுகளுக்குத் தான் முதலில் வழங்க வேண்டும். இதற்குத் 'தடுப்பூசி தேசியம்' என்று பெயர்.

இன்னும் உறுதிசெய்யப்படாத தடுப்பூசிகளுக்கு முன்கூட்டியே விநியோக ஒப்பந்தம் செய்வதால், பொருளாதாரத்தில் பலம் குறைந்த இந்தியா போன்ற நாடுகளுக்குத் தடுப்பூசி கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படலாம். முன்னணித் தேவையில் இருக்கும் ஏழை நாடுகளுக்கு அது கிடைக்காமல் போகலாம். தடுப்பூசியின் விலை அதிகரிக்கலாம். 2009ல் ஏற்பட்ட பன்றிக்காய்ச்சல் பெருந்தொற்றின்போது பணக்கார நாடுகள் தடுப்பூசியை முன்பதிவு செய்தபோதும் பதுக்கிவைத்தபோதும் முதன்மையாகத் தேவைப்பட்ட ஆப்பிரிக்காவுக்கு இந்தத் தடுப்பூசி கிடைக்கத் தாமதம் ஆனதால், அங்கு பாதிப்பு அதிகமானது நினைவிருக்கலாம். இதேபோன்றதொரு நிலைமை இந்தியாவுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது.

ஒரு பெருந்தொற்றுக்குப் போதுமான தடுப்பூசி கிடைக்காமல் உலகில் ஒரு பகுதியினர் பாதிப்புக்கு உள்ளானால், அது அந்தக் கிருமிகளை வெகுகாலம் புழக்கத்தில் வைத்திருக்கவே வழிசெய்யும். அதனால், மற்ற நாடுகளும் பொருளாதாரரீதியில் பாதிப்பைச் சந்திக்கும். ஆகவே, இந்த நிலைமை மாற வேண்டும். கரோனா தடுப்பூசிக்கென்றே உலக சுகாதார நிறுவனம் சர்வதேசக் கூட்டமைப்புடன் இணைந்து 'ஆக்ட் ஆக்ஸிலெரேட்டர்' எனும் அமைப்பை ஏற்படுத்தி யுள்ளது. இது, உலகின் அனைத்து நாடுகளுக்கும் சமமாகவும் மலிவு விலையிலும் தடுப்பூசி கிடைக்கச் செய்கிறது. இதற்கு 'கோவாக்ஸ் வசதி' என்று பெயர்.

கரோனாவுக்கான வெளிநாட்டுத் தடுப்பூசிகள் இந்தியாவுக்குக் கிடைப்பதில் 'தடுப்பூசி தேசியம்' தடையாக இருக்குமானால், 'கோவாக்ஸ் வசதி'யைப் பெறுவதற்கு 'ஆக்ட்' அமைப்புக்கு இந்தியா அதிக அழுத்தம் கொடுக்க வேண்டும். உலக சுகாதார நிறுவனத்தின் முக்கியப் பொறுப்புகளில் இந்தியாவிலிருந்து இருவர் இருக்கும்போது இந்தச் சிரமங்களைச் சுலபமாகக் கடந்துவிடலாம் என்பது நமது நம்பிக்கை.

**நன்றி : தமிழ் இந்து**

# தொல் தமிழர் சின்னங்கள் கிடைத்த சோழன் மாளிகையில் தொல்லியல் துறை ஆய்வு செய்ய வேண்டும்!





பெ.மணியரசன்

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள 'பழையாறை' கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் தலைநகராக விளங்கிய ஊராகும். இப்போது அப் பகுதியில் "சோழன் மாளிகை" என்ற ஊரில் தொல் தமிழர்களின் சுடுமண் பானைகள், உறை கிணறு, பெண்களின் ஒப்பனைப் பொருட்கள், கருப்பு சிவப்பு வண்ணப் பூச்சுள்ள பானைகள் எனப் பல வரலாற்றுச் சின்னங்கள் கிடைத்துள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் மற்றும் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர்கள் பிரபு, தீந்தமிழன் ஆகியோர் குடந்தை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு உடனடியாக இத்தகவலைச் சொல்லி ஆய்வு செய்வதற்குரிய பணிகளை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர். அத்துடன் திருச்சி, தஞ்சையில் உள்ள தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைக்கும் உரியவாறு தகவல் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் இன்று வரை தமிழ்நாடு அரசுத் தரப்பிலிருந்து எந்த அசைவும் இல்லை. அந்த நால்வழிச் சாலை போட ஒப்பந்தம் எடுத்துள்ள குசராத்தைச் சேர்ந்த பட்டேல் நிறுவனம், தொல்பொருட்கள் கிடைத்த குழிகள் மீது மேலும் மேலும் மண் போட்டு நிரப்பி மூடி வருகிறது.

இந்நிலையில் திருவாரூர் நடுவண் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக உள்ள பேராசிரியர் ச. இரவி அவர்களுக்கு கண்ணோட்டம் வலையொளி நிர்வாகி திரு. பிரபு, திரு. கலியபெருமாள், தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுக்குழு தோழர் தீந்தமிழன் ஆகியோர் தகவல் கொடுத்து அழைத்து வந்து மேற்படி இடங்களைக் காட்டினார்கள்.

பேராசிரியர் ச. இரவி அவர்கள் அந்த இடங்களையும், கிடைத்த தொல் பொருட்களையும் பார்த்துவிட்டு, இவை இடைக்காலச் சோழர்களின் தலைநகரமாகப் பழையாறை விளங்கிய காலத்தில் - அதாவது கி.பி ஏழாம் நூற்றாண்டு வாக்கில் வாழ்ந்தவர்கள் பயன்படுத்திய பொருளாக இருக்க வேண்டும். அதே வேளை, கருப்பு - சிவப்பு வண்ணம் பூசப்பட்ட சுட்ட மண்பானை கிடைத்திருப்பதால், இடைக்காலச் சோழர் காலத்திற்கு முந்திய கால தொல் தமிழர் நாகரிகச் சின்னங்களாகவும் இவை இருக்கலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் கவனஞ் செலுத்தி தமிழ் மொழி, தமிழ் இனம் ஆகியவற்றின் வரலாற்றுச் சின்னங்கள் மீது உண்மையான அக்கறையுள்ள - நேர்மையான - ஆய்வாளர் குழுவை அனுப்பி ஆய்வு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

*(தமிழர்களின் சங்க கால இலக்கியங்களும் திருக்குறள் - சிலப்பதிகாரம் போன்றவையும் சமற்கிருத நூல்களி லிருந்து காப்பி அடித்து எழுதப் பட்டவை என்று நூல்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கும் மேனாள் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறைத் தலைவர் இரா. நாகசாமி போன்றவர்களையோ, அவர்களின் பரிந்துரை பெற்றோ ரையோ அனுப்பாமல் எச்சரிக்கையாக இருக்கும்படி முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்).*

இந்து தமிழ் ஏடே,

**பெ.மணியரசன்**

# இனப்படுகொலையை ஆதரிக்கும் முரளிதரனை எதிர்ப்பது இனவெறியா?

இந்து தமிழ் ஏடு 21.10.2020 அன்று “சனநாயகமும் கருத்துரிமையும் எல்லோருக்கும் பொதுவில்லையா?” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. அவ்வேட்டின் பெங்களூர் செய்தியாளர் இரா. வினோத் அக்கட்டுரையை எழுதியுள்ளார்.

மட்டைப்பந்து வீரர் முத்தையா முரளிதரன் வேடத்தில் தமிழ் நடிகர் விசய் சேதுபதி நடிக்கக் கூடாது என்று பேரெழுச்சியாய்க் கிளம்பிய தமிழர் எதிர்ப்பை எதிர்க்கும் கட்டுரை இது!


இலங்கையில் உள்நாட்டுப் போர், ஈழத் தமிழர்களின் இனப்படுகொலையோடு முடிந்து பத்து ஆண்டுகள் முடிந்த பின்னும் சினிமா, கிரிக்கெட் சம்பந்தப்பட்ட விஷயங்கள் கூட தமிழகத்தில் சர்ச்சையாக்கப்படுவது சரியா என்று வினோத் கேட்கிறார்.

நூறாண்டுகள், நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் காலனி ஆட்சியில் ஆங்கிலேய அரசு, பிரெஞ்சு அரசு போன்றவை காலனி நாட்டு மக்கள் மீது நடத்திய படுகொலைகளுக்காக, முன்னாள் காலனிகள் அந்த நாடு களை மன்னிப்புக் கேட்குமாறு கோருவதும் இழப்பீடு கோருவதும் இன்றும் தொடர்கிறது. சீனாவில் ஜப்பான் நடத்திய படுகொலைகளுக்காக சீனா இன்றும் ஜப்பானை மன்னிப்புக் கேட்குமாறு கோருகிறது.

தமிழ் இனப்படுகொலை நடந்து பத்தாண்டு முடிந்த பின்னும் இன்று ஏன் அந்த தமிழர்களுக்காகப் பரிந்து

இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்



பேசுகிறாய் என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறது இந்து தமிழ் கட்டுரை!

"ஏ நாதியற்ற தமிழர்களே, நீங்கள் உலகத்தில் 12 கோடி பேர் இருப்பதாகப் பீற்றிக் கொள்கிறீர்கள். உங்களுக்கு இறையாண்மையுள்ள ஒரு நாடு உண்டா? ஒரு தேசம் உண்டா? ஐ.நா. மன்றத்திலே நீங்கள் உறுப்பு வகிக்கிறீர்களா? இல்லை! ஆதிக்கக்காரனுக்கு அடிமைகள் அடங்கிப்போக வேண்டும்; அளந்து பேசுங்கள்?" என்று வெளிப்படையாகப் பேச இன்னும் கொஞ்ச காலம் இருக்கிறது என்று கருதி, இரா. வினோத் போன்றவர் களின் இனத்துரோகக் கட்டுரைகளை வெளியிடுகிறது அவ்வேடு.

இசை, கலை, விளையாட்டு போன்றவற்றிற்கு அரசியல் இல்லை என்று பேசுகிறார் இரா. வினோத். பாரதிராஜா அவர்களை இடித்துக்காட்டி இக்கருத்தை வினோத் எழுதியுள்ளார்.

எந்த நாட்டிலே, அந்நாட்டின் அரசியல் முடிவுக்கு அப்பால் அயல்நாட்டு இசைக் குழுவை, கலைக் குழுவை, விளையாட்டுக் குழுவை அனுமதிக்கிறார்கள்? இந்திய அரசு பாக்கித்தான் மட்டைப் பந்துக் குழுவை இங்கு விளையாட இப்போது அனுமதிக்குமா? சீனாவின் இசைக்குழு இப்போது இந்தியாவில் நிகழ்ச்சி நடத்த மோடி அரசு அனுமதிக்குமா? சீன நாட்டு இணைய டிக்டாக், கேம் ஸ்கேனர் போன்ற செயலிகளை இந்தியா தடைசெய்தது ஏன்? இப்போது நடக்கும் எல்லை மோதல்தான்! இது அரசியல் இல்லையா?

தென் ஆப்பிரிக்காவில் அந்நாட்டின் மண்ணின் மக்களாகிய கருப்பினத்தவர்களின் வாக்குரிமையைப் பறித்து, வெள்ளை இனவெறி ஆட்சி நடந்துவந்தது. கருப்பர்களுக்கு வெள்ளையருக்குச் சமமாக உரிமை இல்லை. இன ஒதுக்கல் (Aparthied) செய்தார்கள். எனவே அந்த நாட்டுடன் இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகள் தூதரக உறவு வைக்காமல் ஒதுக்கி வைத்திருந்தன.

### கலைக்கும் விளையாட்டிற்கும் அரசியல் இல்லையா?

இசை, கலை, விளையாட்டுக் குழுக்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து தென்னாப்பிரிக்காவுக்குப் போகத் தடை; தென்னாப்பிரிக்கக் குழுக்கள் இந்த நாடுகளுக்கு வரத் தடை இருந்தது.

இன ஒதுக்கலை அந்நாடு கைவிட்ட பின்தான் இந்நாடுகள் இத்தடையை நீக்கின. மேற்படி தடையை எல்லோரும் ஆதரித்தோம்! அதேபோல் பாலத் தீனர்களின் தாயகத்தை ஆக்கிரமித்துக் கொண்ட யூதர்களின் இசுரேலுடன் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் தூதரக உறவு கொள்ளாமல் - இசை, கலை, விளையாட்டுக் குழுக்கள் போக - வரத் தடை விதித் திருந்தன. அமெரிக் கக் குடியரசுத் தலைவர் முன்னிலையில் பாலத்தீன விடுதலை அமைப்பிற்கும் இசுரேல் அரசுக்கும் இடையே ஏற்பட்ட அமைதி உடன் படிக்கைக்குப் பின்னரே இசுரேலுக்கு எதிரான தடைகள் நீங்கின.

இலங்கையில் சிங்கள இனவெறி ஆட்சி ஈழத் தமிழர்களை இலட்சக்கணக்கில் இனப்படுகொலை செய்த பின், இலங்கைக்கு எதிராக இந்திய அரசு தூதரக உறவைத் துண்டித்துத் தடைகள் போட்டிருக்க வேண்டும். சிங்கள அரசுடன் சேர்ந்து கொண்டு தமிழின அழிப்புப் போரை வழிநடத்திய இந்திய அரசு எப்படி இலங்கை அரசுக்கு எதிராகச் செயல்படும்?

ஆனால், தமிழ்நாட்டுத் தமிழர்களின் இன உணர்ச்சியைக் கணக்கில் கொண்டு அன்றையத் தமிழ் நாட்டு முதலமைச்சர் செயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில், "இலங்கை அரசுக்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும்; சிங்களப் படை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது, இலங்கை விளையாட்டுக் குழுக்கள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் விளையாடக் கூடாது" என்று சட்டப்பேரவையில் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றினார்!

தமிழ்நாட்டின் குடியரசுத் தலைவராகவோ அல்லது தலைமை அமைச்சராகவோ செயலலிதா இருந்து மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் ஐ.நா.மன்றம் அவர் குரலை செவிமடுத்திருக்கும். பல நாடுகள் தமிழ்நாட்டுடன் சேர்ந்து இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை, கலைக் குழுக்கள், விளையாட்டுக் குழுக்களுக்கான தடை அனைத்தையும் போட்டிருக்கும்!

செயலலிதா அம்மையார் போட்ட அந்த சட்டப் பேரவைத் தீர்மானத்தின் தொடர்ச்சியாகத்தான் இன்றும் தமிழ்நாட்டில் இலங்கை விளையாட்டுக் குழுக்கள் விளையாட அனுமதிக்கக் கூடாது; சிங்களப் படையாட் களுக்குப் பயிற்சி தரக் கூடாது என்கிறோம்.

இதன் தொடர்ச்சியாகத்தான், சிங்களப் பேரினவாத அரசு நடத்திய தமிழினப் படுகொலையை ஆதரித்த, ஆதரிக்கின்ற, தமிழினத் துரோகி முத்தையா முரளிதரன் வேடத்தில் தமிழ்நடிகர் விசய் சேதுபதி நடிக்கக் கூடாது என்கிறோம். சிங்கள நடிகர்களைக் கொண்டோ, வேறு நாட்டு நடிகர்களைக் கொண்டோ முரளிதரன் வாழ்க்கை வரலாற்றுப் படம் வந்தால் எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால் அந்தப் படம் தமிழ்நாட்டில் ஓடக் கூடாது என்கிறோம்!

இனப்படுகொலை மற்றும் மனித உரிமைப் பறிப்பு நாடுகளுக்கு எதிராக நாகரிகச் சமூகம் - சனநாயகச் சமூகம் கடைபிடிக்கும் புறக்கணிப்பு நடவடிக்கையைத்தான் தமிழின உணர்வாளர்களாகிய நாங்கள் கடை பிடிக்கிறோம்.

### ஐ.நா. பொதுச்செயலரும் மனித உரிமை மன்றமும்

அன்றைய முதல்வர் செயலலிதா, அப்போது ஈழத் தமிழர் இனப்படுகொலையால் மனம் பதைத்த தமிழ்

நாட்டுத் தமிழர்களின் வாக்குகளை வாங்குவதற்கான ஒரு சாகசமாக - ஓர் உத்தியாக - இலங்கைக்கு எதிரான தடைகளை விதித்தார் என்று இந்து தமிழ் நாளேட்டின் "உயர்மட்ட அறிவாளர் குழு" எதிர்வாதம் செய்யக்கூடும்!

2009இல் பொறுப்பில் இருந்த ஐ.நா. மன்றத்தின் பொதுச் செயலாளர் பான் கி மூன் அவர்களுக்குத் தமிழ்நாட்டில் வாக்குக் கேட்கும் தேவை இல்லை அல்லவா? ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் உறுப்பு வகிக்கும் அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்குத் தமிழ் நாட்டில் வாக்குக் கேட்கும் தேவை இல்லை அல்லவா!

இனப்படுகொலை நடந்த 2009 ஆம் ஆண்டே, பன்னாட்டுப் புகழ்பெற்ற இந்தோனேசிய மனித உரிமைச் சிந்தனையாளர் தாருஸ்மான் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவை அமர்த்தி, இலங்கையில் இறுதிப்போர் நாட்களில் நடந்த மனிதப் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் முதலியவற்றை ஆய்வு செய்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார். அக்குழு அளித்த அறிக்கை பின்வருமாறு கூறியது.

2009 இறுதிப்போரில் கடைசி மூன்று நாட்களில் மட்டும் 40 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் - பொதுமக்கள் - இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர். வெள்ளைக்கொடி ஏந்தி சரணடையச் சென்ற பொதுமக்கள் இலங்கை படையாட்களால் கொல்லப் பட்டனர். அங்கு நடந்துள்ள படுகொலைகள் மனித குலத்திற்கு எதிரான குற்றம் (Crime against Humanity). இவற்றை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப் பன்னாட்டுப் புலனாய்வுக் குழு அமைக்க வேண்டும் என்று மேற்படி தாருஸ்மான் குழு ஐ.நா. பொதுச் செயலாளர்க்குப் பரிந்துரைத்தது.

2015இல் செனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமை மன்றம் இலங்கை அரசு நடத்திய இறுதிப்போரில் நடந்த படுகொலைகள், போர்க் குற்றங்கள் அனைத்தையும் விசாரிக்க இலங்கை அரசு பன்னாட்டு வல்லுநர்களையும் இணைத்துக் கொண்ட புலனாய்வுக் குழுவை அமைத்து விசாரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

**எந்த நாட்டிலே, அந்நாட்டின் அரசியல் முடிவுக்கு அப்பால் அயல்நாட்டு இசைக் குழுவை, கலைக் குழுவை, விளையாட்டுக் குழுவை அனுமதிக்கிறார்கள்? இந்திய அரசு பாக்கித்தான் மட்டைப் பந்துக் குழுவை இங்கு விளையாட இப்போது அனுமதிக்குமா? சீனாவின் இசைக்குழு இப்போது இந்தியாவில் நிகழ்ச்சி நடத்த மோடி அரசு அனுமதிக்குமா? சீன நாட்டு இணைய டிக்டாக், கேம் ஸ்கேனர் போன்ற செயலிகளை இந்தியா தடைசெய்தது ஏன்? இப்போது நடக்கும் எல்லை மோதல்தான்! இது அரசியல் இல்லையா?**

ஐ.நா. மன்றப் பொதுச் செயலாளர் கொடுத்த அறிக்கைப்படியும் ஐ.நா. மனித உரிமை மன்றம் நிறைவேற்றிய தீர்மானப்படியும் புலனாய்வு அமைப்புகள் அமைக்காதபடி இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் சிங்கள இனவெறி அரசுக்குப் பாதுகாப்பு அரண்களாக விளங்கு கின்றன. ஆனால், சிங்கள அரசு - ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்தது என்ற உண்மையை ஏதோ ஒரு வடிவில், உலக நாடுகள் ஒப்புக் கொள்கின்றன.

### தமிழினப் படுகொலை செய்தோர் மற்றும் முரளிதரன்

தமிழினத்தில் பிறந்த, இலங்கையைச் சேர்ந்த முத்தையா முரளிதரன் 2009 இனப்படுகொலையைக் கண்டிக்கவில்லை. போர் முடிந்த நாள் தன் வாழ்நாளில் மிகவும் மகிழ்ச்சியான நாள் என்றார்.

"2009இல் போர் முடிவுக்கு வந்ததால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது நின்று போனது என்ற கருத்தில்தான் என் வாழ்நாளில் அது மகிழ்ச்சியான நாள் என்று 2019இல் கூறினேன்" என்று இப்போது மீண்டும் கூறியுள்ளார்.

அப்பாவிப் பொதுமக்கள் இனிமேல் கொல்லப்பட மாட்டார்கள் என்று மகிழ்ந்த முரளிதரன் 2008 - 2009 ஆண்டுகளில் ஒரு இலட்சத்திற்கும் மேல் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்ததுண்டா? இல்லை! ஏனெனில் கொன்றவர்கள் முரளிதரனின் எசமானர்கள். கொல்லப்பட்டவர்கள் அப்பாவித் தமிழர்கள்! அப்பாவி மக்கள் கொல்லப் பட்டதற்கு ஒரு சம்பிரதாயத்திற்குக் கூட இன்று வரை கண்டனம் தெரிவிக்கவில்லை! இதில் முரளிதரனுக்குத் தன்னலவெறி அரசியல் இல்லையா?

ஈழத்தமிழர், சிங்களர் என்ற இரண்டு இனங்களின் தாயகமாக உள்ளது இலங்கை. இதைச் சிங்களத் தீவு என்று கூறி பெருமைப்பட்டுக் கொண்டார் முரளிதரன். இதில் அவரது தன்னல அரசியல் இல்லையா?

பிரித்தானியத் தலைமை அமைச்சர் டேவிட் காமரூன் காமன் வெல்த் மாநாட்டிற்காக இலங்கை சென்றிருந்த போது 16.11.2013 அன்று வடக்கே தமிழர் பகுதிக்குப் போய் தமிழர்களின் துயரங்களைக் கேட்டறிந்தார். அவரிடம் தமிழ்த் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளைப் பிடித்துக் கொண்டுபோன, சிங்களக் காவல்துறை என்ன செய்தது என்றே தெரியவில்லை. அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்றே தெரியவில்லை; எங்கள் பிள்ளைகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறிக் கதறி அழுதனர். அதுபற்றி இலண்டன் பி.பி.சி. நிறுவனம் முத்தையா முரளிதரனிடம் கேட்ட

# இனப்படுகொலை ஆதரவாளரை எதிர்த்துக் குரல் கொடுக்கும் தமிழ் இன உணர்வாளர்களைப் பார்த்து சாதி ஆதிக்கக்காரர்கள் வீட்டை முற்றுகையிட்டீர்களா என்று கேட்பது என்ன வகையான சனநாயகம், என்ன வகையான தருக்கம்? இதுதான் சனநாயகமா? இது கண்ணியமான விமர்சனமா?

போது, இருபது, முப்பது பெண்கள் சொல்வதெல்லாம் உண்மை ஆகிவிடுமா என்று எதிர்க் கேள்வி கேட்டார். இது முத்தையா முரளிதரனின் இனத்துரோக அரசியல் இல்லையா?

கடந்த ஆண்டு இலங்கைக் குடியரசுத் தலைவர் தேர்தல் நடந்தபோது முரளிதரன் இனப்படுகொலைக் குற்றவாளி கோத்தபய இராசபட்சேவுக்குத் தேர்தல் பரப்புரை செய்தார். அப்போதுதான் என் வாழ்நாளில் மகிழ்ச்சியான நாள் 2009இல் போர் முடிந்த நாள் என்றார். அதுமட்டுமல்ல, இப்போது இலங்கையில் எங்கு வேண்டுமானாலும் அச்சமின்றிப் போய் வர முடிகிறது. இந்த அமைதி - பாதுகாப்பு மேலும் உறுதிப்பட வேண்டுமானால், கோத்தபய ஆட்சி வர வேண்டும் என்று பேசினார்.

இப்படிப்பட்ட முரளிதரனைத்தான் “அவர் ஒரு விளையாட்டு வீரர்; அரசியர் அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது” என்று வினோத் விளக்குகிறார். என்னே அவரது வாய்மை!

முரளிதரன் அரசியலற்ற வெறும் விளையாட்டு வீரரா? தமிழினத்திற்கு எதிரான அரசியல் பேசினால், அது அரசியல் அல்ல என்பது இந்து தமிழ் நாளேட்டின் நடுப்பக்கச் சிந்தனை நாயகர்களின் முடிவோ? மேற்கண்ட முரளிதரன் கூற்றுகள் அனைத்தும் அவர் கொடுத்த காணொலிக் காட்சிப் பதிவுகளாக உள்ளன.

“இலங்கை என்பது சிங்கள பௌத்த நாடு என்று சொன்னேன். அது உண்மை தானே” என்று ஒரு நேர்காணலில் கேட்கிறார் முரளிதரன். இலங்கை அரசமைப்புச் சட்டம் அனைவர்க்கும் ஒன்றுதான் அதில் பாகுபாடு இல்லை” என்கிறார் அதே காணொலியில்! இலங்கையில் ஈழத் தமிழர்களும் - அவர்கள் தாயகமும் - அவர்களின் இந்து மதமும் இல்லையா?

இந்துத் தமிழ்நாளேட்டின் சிந்தனை நீர்த் தேக்கங்களுக்கு (Think Tanks) மேற்கண்ட முரளிதரன் கூற்றுகள் எல்லாம் மட்டைப் பந்து விளையாட்டின் சில விதிமுறைகளாகத் தெரிகின்றனவோ? சிங்களப் பேரினவாத அரசியலாகத் தெரியவில்லையோ?

### தமிழின வெறுப்பு அரசியல்

விளையாட்டு வீரரிடம் போய் அரசியல் பண்ணலாமா என்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர், தமிழின வெறுப்பு தலைக்கேறிப்போன இந்த “நடுநிலை இதழாளர்கள்!”

நாங்கள் அரசியல் பண்ண வில்லை; அரசியல் அனாதையாகக் கிடக்கும் தமிழினத்தின் அவலக் குரலை வெளிப்படுத்துகிறோம். மனித உரிமைகளின் மாண்பறிந்த பன்னாட்டுச் சமூகம் காட்டிய பாதையைப் பின்பற்று கிறோம். தமிழினப் படுகொலைக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் கேடயம்தான் முரளிதரன் என்கிறோம். அந்தப் பாத்திரத்தில் நடிக்க வேண்டாம் என்று நம் நடிகர் விசய் சேதுபதியைக் கேட்டுக் கொண்டோம்.

எங்கள் வேண்டுகோளை விசய் சேதுபதி ஏற்க வில்லை; எழுந்துள்ள எதிர்ப்பின் ஆழத்தையும் பரப்பையும் புரிந்து கொண்ட முரளிதரன், தன் படத்தில் விசய் சேதுபதி நடித்தால் படம் தோற்றுவிடும் என்று உணர்ந்து கொண்டார். அதை நாசுக்காக - வெளிப் படுத்தி, விசய் சேதுபதி வேண்டாம் என்று விலக்கிக் கடிதம் எழுதிவிட்டார். விலக்கப்பட்ட நபர் விசய் சேதுபதி; அவராக விலகிக் கொண்டது போல் சொற்களை அடுக்கியுள்ளார் சூழ்ச்சிக்கார வினோத்!

இரா. வினோத்தின் இந்து ஏட்டுக் கட்டுரையை வரிக்கு வரி மறுக்கலாம். அவரின் அந்தரங்க சூழ்ச்சியை வெளிப்படுத்தலாம். கட்டுரை பெரிதாகிவிடும். எல்லாவற்றையும் வாசகர்களே புரிந்துகொள்வார்கள்!

திரும்பத் திரும்ப சாதியை இழுத்துப் போர்த்திக் கொள்கிறார் வினோத்! முரளிதரனைச் சாதி பார்த்துத் தமிழ் உணர்வாளர்களும் சனநாயகவாதிகளும் கண்டிப்பது போல் எழுதுகிறார். முரளிதரன் தமிழ்நாட்டு மரபுவழித் தமிழன் என்பது மட்டுமே என்னைப் போன்றவர்களுக்குத் தெரியும். அவர் என்ன சாதி என்று தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டவில்லை. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் சாதி வேறுபாடற்ற உயர்பண்புத் தமிழன்! அவர் தலைமையை ஏற்றுக்கொண்டது தமிழீழம்.

முரளிதரனை எதிர்ப்போர், வர்க்க வேறுபாடு பார்ப்பதாகச் சொல்கிறார் இரா. வினோத். கோடீசுவரராக

உள்ள முரளிதரனின் இன்றைய வர்க்கம் என்ன?

அடுத்து மலையகத் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள தமிழ்த்தேசியர்களுக்கும் இடையே சிண்டுமுடியும் வேலையில் ஈடுபட்டுள்ளார் வினோத்! மலையகத் தமிழர்கள் உரிமை காக்கவும் அவர்கள் மீது சிங்கள அரசு ஏவி விட்ட ஒடுக்குமுறையைக் கண்டிக்கவும் 1950, 60 களிலிருந்து இன்று வரை தமிழ்நாடு குரல் கொடுத்து வருவதும் போராடியதும் வினோத்துக்கு தெரியுமா? இவற்றை எல்லாம் இந்து தமிழ் நாளேட்டின் நடுப்பக்கச் சிந்தனை நாயகர்கள் விசாரித்து உண்மையறிய வேண்டும்!

தமிழ்நாட்டில் முத்தையா முரளிதரனுக்கு எதிராகக் கிளம்பிய இன உணர்வுக் குரலை - சனநாயகக் குரலை தூண்டி விட்டவர்கள் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் என்று அபாண்டமாக குற்றம் சாட்டுகிறார் வினோத். “இலங்கை அரசுக்கு ஆதரவானவர் (முரளிதரன்) என்று புலம்பெயர் ஈழத் தமிழ்க் குழுக்கள் ஒரு திரியை கொளுத்திவிட்டதும், தமிழ்நாட்டில் தமிழ் அடையாள அரசியல் பேசுவோர் குரல் பொங்க ஆரம்பித்தது,” என்று வினோத் நையாண்டி செய்கிறார். முரளிதரன் சிங்கள பேரினவாத அரசுக்கு ஆதரவானவர் என்பது கட்டுக் கதையா? அடுத்து, புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள்தான் தமிழ்நாட்டுத் தமிழர்களைத் தூண்டி விட்டார்கள் என்று இவர் கூறுவது நயவஞ்சகமல்லவா!

“இப்போது போராளிகள் வேஷம் கட்டுபவர்கள் தமிழ்நாட்டில் சாதியின் பெயரால் நடந்த கொலைகளைச் செய்தவர்கள் வீடுகளை முற்றுகையிட்டார்களா?” என்று கேட்கிறார். சாதிக் கொலைகளை தொடர்ந்து கண்டித்து வந்துள்ளோம். சாதி ஆதிக்கக் கொலைகாரர்களைச் சட்டப்படி தண்டிக்க வேண்டும் எனப் போரடி வந்திருக் கிறோம், அது வேறு செய்தி. ஆனால் இனப்படுகொலை ஆதரவாளரை எதிர்த்துக் குரல் கொடுக்கும் தமிழ் இன உணர்வா ளர்களைப் பார்த்து சாதி ஆதிக்கக்காரர்கள் வீட்டை முற்றுகையிட்டீர்களா என்று கேட்பது என்ன வகையான சனநாயகம், என்ன வகையான தருக்கம்?


தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்திப் போராடி துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் பலியானார்கள். அந்தத் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் போராடினால் சாதி ஆதிக்கக் காரர்கள் கொலை செய்தபோது அவர்கள் வீடுகளை நீங்கள் முற்றுகையிட்டீர்களா என்று கேட்பாரோ வினோத்? எவ்வளவு வன்மமாக, சூழ்ச்சியாக, மக்களைத் திசைதிருப்பும் உள்நோக்கத்தோடு இந்த வினாவை எழுப்பியுள்ளார்! இச்சூழ்ச்சியை சனநாயக உணர்வுள்ள அனைவரும் புரிந்துகொள்வர்.


இலங்கையில் ஈழத்தமிழர்கள் சிங்கள இனவெறியர் களால் கொத்துக் கொத்தாகக் கொலை செய்யப்பட்ட ஆண்டுகளில் முத்தையா முரளிதரன் இலங்கை அணியில் மட்டைப் பந்து விளையாடி விருதுகள் பெற்று வந்தார். என்னை போன்றவர்கள் அப்போது, நம் தமிழ்ப் பிள்ளை விருதுகள் வாங்கி வருகிறது என்று பெருமையாகத்தான் கருதினோம். அப்பிள்ளை என்ன சாதி என்றெல்லாம் பார்க்கவில்லை. அதே பிள்ளை பிற்காலத்தில் தமிழினப் படுகொலையை ஆதரித்தும், கோத்தபய இராசபட்சே குடும்பத்திற்கு வாக்கு கேட்டும் வெளிபட்ட போதுதான் முத்தையா முரளிதரனின் இனத்துரோகம் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிய வந்தது.

முத்தையா முரளிதரன் வேடத்தில் விசய் சேதுபதி நடிக்கக் கூடாது என்று வலைத்தளங்களில் விமர்சனம் செய்தவர்களை “சோஷியல் மீடியா மாஃபியா” என்று தரக்குறைவாகத் தாக்கியுள்ளார் வினோத். இதுதான் சனநாயகமா? இது கண்ணியமான விமர்சனமா?

●


## தற்போது விற்பனையில்




பெ. மணியரசன் எழுதிய
**பா.ச.க. பாசிச எதிர்ப்பின் பாதை**
பக்கம் : 48 / விலை : ரூ. 35/-

கி.வெங்கட்ராமன் எழுதிய
**கொரோனாவுக்கு பின் மாற்று பாதை**
பக்கம் : 56 / விலை ரூ. 45/-

நூல் கிடைக்குமிடம்

பன்மை வெளி

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078
**பேச :** 044 - 2474 2911, 94439 18095, 98408 48594
இணையம் : www.panmaiveli.com |
மின்னஞ்சல் : panmaiveli@gmail.com

சம்மு காசுமீரின் சிறப்புரிமையைப் பறித்து, அம்மாநிலத்தை இரண்டு ஒன்றிய மண்டலங்களாகச் சிதைத்து சின்னா பின்னப் படுத்திட பா.ச.க., ஆட்சிக்குத் துணிச்சல் கொடுத்தது யார்? அம்மாநிலத்தை மாற்றி மாற்றி ஆண்ட பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் மெஃபூபாவின் மக்கள் சனநாயகக் கட்சி ஆகியவையும் அவற்றின் கூட்டணிக் கட்சிகளும்தாம்! தேசிய மாநாட்டுக் கட்சியும், மக்கள் சனநாயகக் கட்சியும் காங்கிரசுடனும் – பா.ச.க. வுடனும் மாற்றி மாற்றி மாநிலத்திலும் இந்திய ஆட்சியிலும் கூட்டணி சேர்ந்தன. தங்கள் தலைமையை ஏற்றுக்கொண்ட, தங்களை நம்பிய வெகுமக்களை வெறும் வாக்காளர்களாக, போர்க்குணம் அற்றவர்களாக வீரியம் இழக்கச் செய்தன இக்கட்சிகள். உயிரைப் பறிப்பது போல் சம்மு காசுமீர் சிறப்புரிமையைப் பறித்து சிறு சிறு ஒன்றிய மண்டலங்களாக பா.ச.க. பாசிசம் சிதைத்தபோதும் இக்கட்சிகளின் அடுத்தநிலைத் தலைவர்களும் போராடவில்லை, மக்களும் போராடவில்லை.



அடிமைப்படுத்தப்பட்ட இனங்களில் மக்களுக்கு ஆட்சியாளர்கள் பரப்பும் தேர்தல் நோய் பிடித்து விட்டால், அம்மக்கள் போர்க்குணத்தை இழந்து விடுவார்கள். குருதிச் சோகை நோயைவிடக் கொடியது தேர்தல் சோகை நோய்! சிறைக் காவலில் இருந்து வெளியே வந்தவுடன் பரூக் அப்துல்லாவும், மெஃபூபாவும் உரிமை உரையாடல்கள் சிலவற்றை ஒலிக்கின்றனர். ஆனால் அவர்களை நம்பிட சம்மூ காசுமீர் மக்கள் அணியமாகவில்லை. பரூக் அப்துல்லாவின் அண்மைய நேர்காணலே இதற்குச் சான்று. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டின் ஆசிரியர் குழு இயக்குநர் பிரபு சாவ்லா, பரூக்கை நேர்கண்ட உரையாடல் 25.09.2020 அன்று அவ்வேட்டில் வந்துள்ளது.

**பிரபு சாவ்லா : எதிர் காலத்தின் நம்பிக்கையாக பள்ளத்தாக்கு (காசுமீர்) மக்கள் உங்களை எதிர் பார்க்கிறார்கள். அவர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?**

**பரூக் அப்துல்லா :** நான் எப்படி அவர்களுக்கு அறிவுரை கூற முடியும்? என்னைப் புதுதில்லியின் கைப்பாவை என்று மக்கள் அழைக்கிறார்கள். நான் பஜனைப் பாடல்கள் பாடுகிறேன், பாரத் மாத்தா கீ ஜே போடுகிறேன் என்று அவர்கள் சாடுகிறார்கள். ஆட்சியாளர்கள் எனக்கு (இங்கு) இடமில்லாமல் செய்து விட்டார்கள். சிலர் என்னைப் பாக்கித்தானி என்கிறார்கள்.

தில்லி ஏகாதிபத்தியத்துடன் கூடிக் கும்மாளம் அடித்து விட்டு, காசுமீர் மக்களைக் காட்டிக் கொடுத்து, கங்காணிப் பதவிகளைச் சுகித்துவிட்டு, எசமானர்கள் கைவிட்டபின் பரூக் அப்துல்லா ஈகி வேடம் போடுகிறார். பரூக் அப்துல்லாக்களும் மெஃபூபாக்களும் தமிழ் நாட்டில் ஏற்கெனவே இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். இவர்கள் தி.மு.க. விலும் அ.தி.மு.க. விலும் மட்டுமல்ல, மற்ற கட்சிகளிலும் இருக்கிறார்கள்.

அடுத்த குறி தமிழ்நாட்டின் மீது வைத்திருக்கிறது மோகன் பகவத் – மோடி அரசு! அப்படி ஒரு பெரு வெடிப்பு நிகழ்ந்தால் அணிமாறக் காத்திருக்கின்றன சில கட்சிகள்! தமிழ்நாட்டு அப்துல்லாக்கள் சிறைக்குப் போவார்களா, சாதுரியமாகத் தப்பித்துக் கொள்வார்களா என்பது அப்போது தான் தெரியவரும்!

தமிழ்நாட்டு அப்துல்லாக்கள் சிறைக்குப் போனாலும் அல்லது தப்பித்துக் கொண்டாலும் தமிழினக் கலைப் பாளர்களுக்கு – பா.ச.க. பாசிஸ்டுகளுக்கு நெருக்கடி ஒன்றுமில்லை. மக்களோ, செய்வதறியாது தவிப்பார்கள். இவை எல்லாவற்றையும் முன் உணர்ந்துதான் பதவி, பணம், விளம்பரம் மூன்றுக்கும் ஆசைப்படாத – எந்த நெருக்கடியிலும் இன உரிமையை விட்டுக் கொடுக்காத – இனத்திற்காக எந்த ஈகத்தையும் ஏற்கும் நெஞ்சுரம் கொண்ட தலைமை தேவை என்கிறோம். அத்தலை மையின் கீழ் இலட்சக்கணக்கான வெகுமக்கள் தேவை! இலட்சியத் தமிழ்த்தேசியம் என்பது ஒற்றைக் கதாநாயகத் தலைமை இல்லை. ஒற்றைக் கதாநாயகன் ஒரு நூறு பேரை வீழ்த்திட இது திரைப்படமல்ல. சமத்துவ நிலையிலும், அடுத்தடுத்த நிலையிலும் அடுக்கடுக்கான போர்க்குணத் தலைமைகள் தேவை! அந்தக் கட்டுக் கோப்பில் இலட்சக்கணக்கான வெகுமக்கள் தேவை! இதுவே இலட்சியத் தமிழ்த் தேசியம்!

# தமிழ்நாட்டு பரூக் அப்துல்லாக்களும் தமிழர்களுக்கான பாடங்களும்

**தமிழ்த்தேசியன்**

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**






குரோம்பேட்டை எஸ்டிஎன்பி வைஷ்ணவா பெண்கள் கல்லூரியில் காவலன் எஸ்ஓஎஸ் ஆப் அறிமுக விழா நடந்தது. Dr. ஜலதி உமாசங்கர் Triple M.A.,M.Phil.,B.Ed., chairman Jaladhi Foundation அவர்கள், செயிண்ட் தாமஸ் மவுண்ட் காவல் மாவட்ட துணை ஆணையர் திரு. Dr.கே. பிரபாகர் M.A.,M.Phil.,Ph.D., அவர்கள் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர். சேலையூர் காவல் மாவட்ட உதவி ஆணையர் திரு. கே சகாதேவன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரியின் முதல்வர் Dr.ஆர்.கீதா அவர்களும் துணை முதல்வர் Dr.பி. பீனா அவர்களும் நிகழ்வை சிறப்புற நடத்தினார்கள்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

மகத்துவமான மருத்துவ நூல்கள்
விற்பனைக்கு!




பாப்புலர் பப்ளிகேஷன்ஸ்
ISO - 9001 : 2008 தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம், சென்னை.
சாய் சுவாதி ப்ளாட்ஸ், நக்கீரன் தெரு, மேற்குமாம்பலம், சென்னை -33
தொடர்புக்கு : 97875 55182 / 99523 35505